# அறிவுக் களஞ்சியம்

15



ஆர்க்கியொப் டெரிக்ஸ்
(31 ஆம் பக்கம்)

வரதர் வெளியீடு

ரூபா 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசகர் கருத்து

○ ஓராண்டை பூர்த்தி செய்து இரண்டாவது ஆண்டில் காலடி வைத்த "அறிவுக் களஞ்சியத்திற்கு" என் வாழ்த்துக்கள். பலருடைய அறிவுகளை மென்மேலும் வளர்ச்சி அடையச் செய்வதற்கு "அறிவுக் களஞ்சியம்" முக்கியமானதாகும்.

— செ. அருட்குமரன்
டாக்டர் நடராஜா இராமலிங்க வித்தியாலயம், ஆவரங்கால்.

○ அறிவுக் களஞ்சியம் 3 இல் பரிசுக் கதை "எழுதிய" கதாசிரியருக்கு (உண்மையான கதையாசிரியர் சென்னையிலுள்ளார்). இந்த நூற்றாண்டின் மிகச் சிறந்த 'பார்த்து எழுதுபவர்' என்னும் பட்டத்தை வழங்குவதில் அடியோம் பெருமையடைகிறோம். மேலும் அவர் இப்பணியில் சிறப்புத் தேர்ச்சி பெற்று, ரத்னபாலாவில் வரும் கதைகளை மட்டுமல்லாது அம்புலிமாமா, பாலமித்ரா போன்ற புத்தகங்களில் வரும் கதைகளையும் சிறப்புறப் பார்த்து எழுதி தங்களிடம் பரிசும் பெற்றுச் செல்லுமாறு வாழ்த்துகின்றோம்.

(அ. க. 3 ல் 'கண்ணனின் பெருமை' என்ற பெயரில் வெளிவந்து பரிசு பெற்ற கதை "ரத்னபால" ஏப்றல் 86 ல் வெளிவந்த "பண்பெனப்படுவது" என்ற கதையின் மறுபதிப்பு என்றே சொல்லிவிடலாம்- வெட்கம்!)

— ஒரு அன்பர், கல்லூரி வீதி யாழ்.

○ நீங்கள் வெளியிடும் அறிவுக் களஞ்சியம் பல்வேறு சம்பந்தமான பொது அறிவுகள், ஐயங்களை விளக்கி தெளிவாக்குகின்றது. வினாவிடைகள் போன்றவற்றைப் படித்து வியப்படைகிறேன். தமிழீழத்தில் இப்படிப்பட்ட ஒரு நூல் வெளியாகின்றது என்பது எனக்கு மட்டுமல்லாது தமிழீழ மக்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது.

— யோ. அ. டிலக்ஷன், 25, மாட்டின் ஒழுங்கை, யாழ்.

○ அ. க. 7ல் 'நீலக் குழந்தைகள்' என்ற கட்டுரையில் அதை எழுதியவரின் பெயரும் பதவியும் குறிப்பிட்டிருந்தால் படிப்பவருக்கு நம்பிக்கை ஏற்படும் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம். 'றொடியர்கள்' என்ற கட்டுரையில் றொடியர்கள் குறவர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மையில் அவர்கள் குறவர்கள் அல்லர். அவர்கள் சிங்கள மக்களிடையே மிகவும் தாழ்த்தப்பட்ட சாதியினர்; இன்றும் பிச்சை எடுத்தே வாழ்கின்றனர்.

— சி. பொன்னம்பலம், கரவெட்டி.

○ 'அறிவுக் களஞ்சியம்' பற்றி இழிவாக ஒருவர் ஓராண்டு முன்னால் எழுதி வெளியிட்ட நூலை நீங்கள் பார்க்கவில்லையா? பார்த்திருந்தால் அதைப் பற்றி ஏதும் பகராதிருப்பதேன்?

'நாய்கள் குரைத்துக் கொண்டு நின்றாலுமே, குதிரை அதைச் சட்டை செய்யாது ஓடிக் கொண்டேயிருக்கும்' என்பது போல விமர்சனத்துக்கு அஞ்சாத எழுத்தாளர் தம்முள் நீங்களும் ஒருவர் என்று நான் நம்புகிறேன். சரிதானா?

— அல்லை ஆறுமுகம்

(நான் நேர்மையுடன் என் மனதுக்குச் சரியென்பதைச் செய்கிறேன்; எழுதுகிறேன் - எனவே எந்த விமர்சனங்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் மனம் தளர்வதில்லை. பிழைகளை எவராவது சுட்டிக் காட்டினால், அவைகளைத் திருத்தவும் திருந்தவும் எப்போதும் விருப்பமாக இருக்கிறேன். — ஆசிரியர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறள் முத்துக்கள்



அறங் கூறான் அல்லசெயினும் ஒருவன்
புறங் கூறான் என்றல் இனிது.

ஒருவன் - ஒரு மனிதன்; அறம் கூறான் - அறத்தை வாயினாலும் சொல்லான்; அல்ல செயினும் - அறமற்ற எவகளையே செய்பவனாயினும்; புறங் கூறான் - அவன் பிறரைப் பழித்துப் புறம் கூறாதவனாயிருப்பது; இனிது - மிக நன்றாகும்.

அறத்தைப் பற்றிப் பேசாதவனாயும், அறமற்ற தீயவைகளையே செய்பவனாயும் இருந்தாலும், அவன் பிறரைப் பழித்துப் புறங் கூறாதவன் என்றிருப்பது மிகவும் இனியதாகும்.


அறிவுக்

# களஞ்சியம்

**15**

ஆசிரியர்: வரதர்

O

இணை ஆசிரியர்:
க. குணராசா M. A., S. L. A. S
(செங்கை ஆழியான்)

O

துணை ஆசிரியர்:
"புத்தொளி"

O

அலுவலகம்,
226, காங்கேசன்துறைச்
சாலை, யாழ்ப்பாணம்.



காப்பாளர்கள்:

★ திருமதி. ச. அருள்நங்கை B. A. (Hons)
★ திரு. கா. வை. இரத்தினசிங்கம்
(சொக்கூர்கிழார்)
★ திரு. சு. குமாரசாமி, B. Sc.,
★ மூதறிஞர் க. சி. குலரத்தினம்
★ பேராசிரியர், அ. சண்முகதாஸ்
★ திரு. நா. கா. சண்முகநாதபிள்ளை B. Sc.
★ பேராசிரியர், செ. சிவஞானசுந்தரம் (நந்தி)
★ திரு. சி. சிவசரவணபவன் M. A., (சிற்பி)
★ வித்துவான் க. சொக்கலிங்கம் M. A.
(சொக்கன்)
★ திரு. அ. வை. நாகராஜன்
★ திரு அ. பஞ்சலிங்கம் B. Sc.,
★ திரு. ச. பாலசுந்தரம் B. A. (Hons)
★ வண. பிரான்சிஸ் அடிகளார். M. A.,
★ மருத்துவ கலாநிதி, எம். கே. முருகானந்தன்.
★ திரு. கோ. சி. வேலாயுதம் B. Sc.,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீர்வேலி
# சிவசங்கர பண்டிதர்

ஆறுமுகநாவலரோடு சமகாலத்தில் வாழ்ந்து, தமிழுக்கும் சைவத்துக்கும் தொண்டாற்றியவர் நீர்வேலி சிவ சங்கர பண்டிதர்.

ஆறுமுகநாவலர் பிறந்த ஆண்டு 1822. சங்கர பண்டிதர் பிறந்த ஆண்டு 1821. நாவலர் மறைந்தது 1879 ஆம் ஆண்டு. சிவசங்கரர் மறைந்தது 1870 ஆம் ஆண்டு நாவலர் பெருமானுக்கு ஒரு வருட இளமை மிக்க சிவ சங்கரர் நாவலர் மறைவுக்கு (1879) ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பே மறைந்து விட்டார்.

நாவலரின் உற்ற நண்பராக விளங்கிய சிவசங்கர பண்டிதரின் பிறப்பிடம் நீர்வேலி.

19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கிறிஸ்தவ மிஷனறிமார் கிறிஸ்து சமயத்தை யாழ்ப்பாணத்தில் பரப்ப எடுத்த முயற்சிகளுக்கு எதிராக போர்க்கொடி தொடுத்த பெரியார்களில் நாவலரும் சிவ சங்கர பண்டிதரும் மிக முக்கியத்துவம் வாய்ந்தவர்கள். இம்மண்ணில் சைவ சித்தாந்தம் நிலைத்து நிற்பதற்கு இவர்கள் இருவரின் ஒன்றிணைந்த போராட்டமே முக்கிய காரணம் என்பது வரலாற்று ஆசிரியர்கள் ஏற்றுக்கொள்ளும் பெரும் உண்மை.

சிவ சங்கர பண்டிதர் வடமொழியில் மிக ஆழ்ந்த புலமை மிக்க பெரியார். சமஸ்கிருதப் பேரறிஞர் என்றே நாம் அவரைக் கொள்ளலாம். சைவ ஆகமங்களின் விதிகளை நன்கு கற்றுணர்ந்து கொண்டவர்.

இதனைக் கண்டு கொண்ட நாவலர் பெருமான் சங்கர பண்டிதரை அழைத்து தமது வண்ணார் பண்ணை சைவப் பிரகாச வித்தியாசாலையிலே சைவ சித்தாந்தத்தின் தத்துவ நெறி பற்றி தொடர் விரிவுரையாற்றும் வண்ணம் பணித்தனர்.

இவ்விரிவுரைத் தொடரானது யாழ்ப்பாணச் சைவத் தமிழ் மக்களிடையே சைவ சமயம் பற்றிய ஒரு விழிப் புணர்ச்சியை ஏற்படுத்தியது.


சிவ சங்கர பண்டிதரினால் எழுதி வெளியிடப்பட்ட முக்கியமான நூல் ''கிறிஸ்து மதக் கண்டனம்'' என்பது. கிறிஸ்து மதத்தினைக் கண்டித்து எழுதப்பட்ட நூல் இது.

நாவலர் பெருமான் ''பெரிய புராண சூசனம்'' என்னும் நூலை எழுதுவதற்கு சிவ சங்கர பண்டிதர் உற்ற துணையாக அவருக்கிருந்தார். அவரது தொண்டின் பெருமை பற்றி நாவலர் போற்றிப் புகழ்ந்துள்ளார்.

○ ○ ○ ச. பாலசுந்தரம், பீ. ஏ. (சிறப்பு) ○ ○ ○




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# டாவின்சியின் ஹெலி கொப்டர்

கி. பி. 1452 இல் இத்தாலி நாட்டிற் பிறந்த லியனார்டோ டாவின்சி என்ற பேரறிஞரின் தீர்க்க தரிசனம், பல புதிய கண்டு பிடிட்புகளுக்கு உதவியுள்ளது பல புதிய கண்டு பிடிப்புகளின் கர்த்தாவாக அவர் இருந்துள்ளார். இவர் சிறந்த தோர் ஓவியராகவும், திறமை மிக்க பொறியியலாளராகவும் புகழ் பெற்றிருந்தார் இவரது சிறப்பம்சம் பல்வேறு கலைத்துறைகளிலும் பெற்றிருந்த நிபுணத்துவமாகும். வானியல், தாவரவியல், விலங்கியல், உடற்கூற்றியல் ஆகிய பல துறைகளையும் கற்று, அவர் கருதியவற்றை, கண்டறிந்தவற்றை விளக்கப்படங்களாகவும் வரைந்து வைத்துள்ளார்.

இன்று உலகில் மெருகூட்டப்பட்டுக் காணப்படும் பல வகையான இயந்திர சாதனங்களையும் வெளியுருவப்படங்களாக இவர் வரைந்துள்ளார். ஆகாய விமானம் பற்றி எண்ணக் கருத்துக்கள் நிலவாத அக்காலத்தில் ஆகாய விமானம் போன்ற சித்திரமொன்றை இவர் வரைந்துள்ளார். அத்தோடு ஹெலிக் கொப்டர் பற்றிய அடிப்படைக் கோட்பாடுகள் பற்றிய சிந்தனை அவருக்கிருந்துள்ளது. அது எப்படி இயங்கவேண்டும், அமைய வேண்டும் எனத்தனது பொறியியல் அறிவின் துணை கொண்டு விளக்கப்படமாக வரைந்து தந்துள்ளார். தரையிலிருந்து நேராக மேலே கிளம்பவும், நேராகத் தரையில் இறங்கவும் ஏற்ற அமைப்பில் டாவின்சியின் ஹெலிக்கொப்டர் இருந்தது. டாவின்சியின் ஹெலிக் கொப்டரில் ஹெலிக் கொப்டரின் முக்கிய உறுப்பான சுழலி / செலுத்தி எனப்படும் புறெபெல்லர் வரையப்பட்டிருந்தது. இதனடிப்படையிலேயே 1936 இல் ஜேர்மனியைச் சேர்ந்த ஃபாக் உல்ப் என்ற கம்பனி தரமான ஒரு ஹெலிக் கொப்டரைத் தயாரித்தது. ●



— "நீலன்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு காண்டா மிருகத்தின் கதறல்!



என் பெயர் காண்டா மிருகம்' 'ரைனாசரஸ்' என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். கிரேக்க மொழியில் இதன் அர்த்தம் மூக்கின் மேல் கொம்புள்ளவன் என்பதாகும். நான் இந்தப் பூமியில் தோன்றி பல ஆயிரம் ஆண்டுகளாகி விட்டது. நீங்கள் எனக்குப் பிறகே இந்தப் பூமியில் தோன்றியுள்ளீர்கள். ஆனால், உங்களது பேராசை வெறியினால் எங்கள் இனங்கள் வேட்டையாடப்பட்டு வருகின்றன. எங்களது கொம்புகளுக்காக எங்களை வேட்டையாடிக் கொல்கிறீர்கள். அராபிய நாடுகளில் கத்திகளுக்கு எங்கள் கொம்புகள் தேவையாம். ஆசியாவில் காய்ச்சலுக்கு எங்கள் கொம்பில் செய்த மருந்து தேவையாம். இருபது வருடங்களுக்கு முதல் நாங்கள் அறுபத்தையாயிரம் பேர் இருந்தோம். இன்று ஆக இரண்டாயிரத்து ஐந்நூறு பேர் தான் இருக்கிறோம். எங்களை மாதிரி இந்த உலகத்தில் வேறு எந்த மிருகமும் இந்த அளவுக்குக் கொல்லப்படுவதில்லை.

ஆபிரிக்காவில் சிம்பாவே என்றொரு நாட்டிலே எங்களைப் பார்க்க வரும் உல்லாசப் பயணிகளால் ஒரு காலத்தில் முன்னூறு கோடி ரூபா வருமானமாகக் கிடைத்தது. இப்ப எங்களைக் கொம்புக்காகக் கொலை செய்யத் தொடங்கியதும் அந்த வருமானமும் குறைந்து விட்டது. எங்களைப் பாதுகாக்க சிம்பாவே நாட்டால் முடியவில்லை. அவனவன் எங்களை வேட்டையாடுகிறான், எங்களைக் குற்றுயிராக்கி விட்டு பெற்றோல் ஊற்றிக் கொளுத்தி விடுகிறான். அப்பொழுது தான் எங்களது கொம்பு சுலபமாகக் கழன்று வருகுதாம். பாவிகள்.

இப்பொழுது எங்களது கொம்புகளை அதிக விலைக்கு வாங்கிற நாடு சீனா. எங்களது கொம்புகளிலிருந்து ஒரு மருந்து தயாரிக்கிறார்கள். தைவானில் மருந்துக் கடைகளில் எங்கள் கொம்புகளைத் தொன் கணக்கில் விற்கிறார்கள். ஆபிரிக்கக் கண்டத்தைச் சேர்ந்த காண்டா மிருகக் கொம்பு என்றால் ஒரு கிலோ ஒரு இலட்சத்து இருபத்தையாயிரம். ஆசியக் கொம்பு என்றால் ஒரு கிலோ பதினேழு இலட்சம் ரூபா. சீனா, தைவானுக்கு அடுத்ததாக எங்களது கொம்புகளை கொரியா தான் மருந்து தயாரிக்க அதிகம் பயன்படுத்துகின்றது.

மனிதனுக்கு இப்போது வெறி பிடித்து விட்டது. நீர்யானைக் கொம்புகளையும் ஒட்டகத்தின் நகங்களையும் வெட்டி இப்போது அலங்காரப் பொருளாகப் பயன்படுத்துகின்றார்கள். எங்களில் கறுப்பு இனம், வெள்ளை இனம்

(மறுபக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு

O து. சுஜிதா, வி.பு.மா. அமைப்பு, பண்டத்தரிப்புக் கோட்டம்

1983ம் ஆண்டு. தமிழீழ விடுதலைப் போராட்டம் வளர்ச்சி அடைந்து வரும் வேளை. தமிழீழ மாணவர்கள் போராட்டத்துடன் இணையத் தவித்தனர். இந் நேரத்தில் எமது தேசிய தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் மாணவர் அமைப்பை அமைக்கும் பொறுப்பை மேஜர். முரளியிடம் ஒப்படைத்தார். யாழ் குடா நாட்டில் மாத்திரம் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட மாணவர் போராட்டத்துடன் இணைந்தனர்!

தமிழீழ மாணவர்களின் கல்வி காலம் காலமாக அழிக்கப்பட்டு வருவதை உணர்ந்த மேஜர் முரளி அவர்கள், அதனை முறியடிப்பதற்காக அமைப்பின் மூலம் கல்வி வளர்ச்சிக் கழகங்களை அமைத்தார். தமிழீழ விடுதலைப் போராட்டம் சம்பந்தமான மக்களின் சந்தேகங்களை நீக்கியும், அனாதைக் குழந்தைகளை பராமரித்தும், கண்காட்சிகளை நடாத்தியும், அமைப்பு செயல் பட்டு வந்தது.

இந்திய தமிழீழ யுத்தத்தின் போது மாணவரின் தொடர்புகள் சீரற்று இருந்தன. பின்பு இரண்டாவது ஈழப்போரின் போது அமைப்பு மீண்டும் புத்துயிர் பெற்று வேலைத்திட்டங்களில் இறங்கியது. பதுங்கு குழி வெட்டுதல், காப்பரண் அமைத்தல், உலர் உணவு சேகரித்தல், காயப்பட்ட போராளிகளை பராமரித்தல், பொது அறிவுப் போட்டிகளை நடாத்துதல், வீரமரண நிகழ்வின் போது '(பான்ட்)' வாத்தியம் இசைத்தல், இயக்கத்தின் வெளியீடுகளை விற்பனை செய்தல் போன்ற பலதரப்பட்ட சேவைகளை ஆற்றின. இன்று இவற்றுடன் கல்விச் சேவையும் விரிவுபட்டும் செயற்படுகிறது.

''புரட்சிக் கல்வி மூலம் புதியதோர் சமுதாயம் படைப்போம்'' என்ற மேஜர் முரளியின் கூற்றுக்கு இணங்க மாணவர் அறிவியல் கழகம், மாணவர் கல்வி வளர்ச்சிக் கழகம், மாணவர் விவசாய கழகம், மாணவர் தொழில் நுட்பக் கழகம், மாணவர் முதலுதவி அணி போன்ற துணை அமைப்பின் ஊடாக மாணவர் அமைப்பு செயற்படுகிறது.

(முற்பக்கத் தொடர்ச்சி)

என இரண்டு இனங்களுள்ளன வெள்ளையினத்திலே ஆகஇப்போது முப்பத்தியொரு பேர் தான் இருக்கிறோம். கறுப்பு இனத்தில் ஆபிரிக்காவில் இரண்டாயிரத்து நூறு பேரும், இந்தியாவில் அறுநூறு பேரும், நேபாளத்தில் நானூறு பேரும். இருக்கிறோம். அடுத்த பத்து வருசத்தில் எத்தனை பேர் இருப்போமோ? படங்களில் தான் நீங்கள் எங்களைக் காண வைத்து விடுவீர்களோ தெரியாது. உங்களது பேராசையையும், கொலை வெறியையும் நிறுத்தவில்லையென்றால் நாங்கள் பூண்டோடு இல்லாது அழிந்து போய் விடுவோம். கொஞ்சம் இரக்கம் காட்டுங்கள். எங்களை உயிர் வாழ விடுங்கள். O

(நன்றி: Our Planet)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே தண்டனையா?

அ. பஞ்சலிங்கம், பி. எஸ்ஸி

ஒரு சிறுவனின் அங்கலாய்ப்பு: ''அண்ணாவும் நானும் சில சமயங்களில் ஒரே தவறைத்தான் செய்வோம். அப்போது அப்பாவோ என் மீது மிகக் கண்டிப்பாக இருப்பார். ஆனால் அண்ணாவிடம் பட்டும் படாததுமாகத்தான் தவறைச் சுட்டிக் காட்டுவார்.

இது போதாதென்று அன்று ஒரு நாள் நான் பாடசாலைக்குப் பிந்திச் சென்றேன். அதே நேரந்தான் உயர்தர வகுப்பில் கற்கும் ஓர் அண்ணாவும் வந்தார். ஒழுக்கத்தைக் கவனிக்கும் ஆசிரியர் தடியால் இரண்டு அடி தந்தார். ஆனால் அந்த அண்ணாவுக்கு அடிக்கவில்லை. கண்டிப்பான சில வார்த்தைகளைக் கூறி அவரை அனுப்பி விட்டார். 'ஏன் இந்தப் பாகுபாடு, இந்த வஞ்சனை' என நான் என் மனதில் கூறிக் கொண்டேன். ஒரே தவறுக்கு இரு வகையான தண்டனையா?''

பிறிதொரு சந்தர்ப்பத்தில் இன்னொரு மாணவனின் எண்ண ஓட்டம்: 'நான் எப்பொழுதும் வகுப்பில் முன்னிலையில் நிற்கும் மாணவன். தரப்படும் வேலையைச் செவ்வனே செய்து முடிக்கும் ஆவலும் ஆற்றலும் ஈடுபாடும் என்னிடமுண்டு. எனது வகுப்பில் பலதரப்பட்ட மாணவர்கள் உள்ளனர். சிலருக்குக் கற்க வேண்டுமென்ற ஆவலோ ஆற்றலோ இல்லை. ஏனோ தானோ என்றுதான் வகுப்பில் இருப்பார்கள். ஆசிரியரும் பல முறை அவர்களைக் கண்டித்தும் பலன் கிடைக்கவில்லை. ஒரு நாள் வீட்டு வேலை செய்யாத மாணவர்களை எழுந்து நிற்கும்படி கூறினார். நானும் எனது சுகவீனம் காரணமாக வீட்டு வேலை செய்யாமையால் எழுந்து நிற்க வேண்டியிருந்தது. அன்று தனது முயற்சிகள் வீண்போவதாக நினைத்த ஆசிரியர் கோபமடைந்து எழுந்து நின்ற எல்லோருக்கும் நன்றாக அடித்தார். எனக்கும் கூடத்தான். பேசாது தண்டனையைப் பெற்றேன். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் இத்தவறை இனிமேல் செய்யாதேயென்று ஒரு வார்த்தை அன்பாகக் கூறியிருந்தால் போதும்' இவ்வாறு நொந்து கொண்டான்.

முதலாவது காட்சியில் ''ஒரே குற்றத்திற்கு இருவகையான தண்டனையா?'' என சிறுவன் ஒருவன் மனம் வெதும்புகிறான். இரண்டாவது காட்சியில் ''ஒரே குற்றம் வேறுபட்ட அளவு நிலையில் இருந்தபோதிலும் ஒரே வகையான தண்டனையா?'' என ஒரு மாணவனின் உள்ளம் குமுறுகிறது.

ஒருவர் மீது நாம் பிரயோகிக்கும் நடத்தையின் வகை அவருக்கு ஒரு செயற்பாட்டிலுள்ள ஆவல், ஆற்றல், ஈடுபாடு, திறமை, அனுபவம், விளக்கம் போன்றவற்றைக் கொண்டு தீர்மானிக்கப்படும். அவ்வாறு பார்க்கும் பொழுது உயர்தர வகுப்பு மாணவனொருவன் பிரச்சினையைச் சுலபமாக விளங்கக்கூடும். எனவே கீழ் வகுப்பு மாணவனிலிருந்து வேறுபட்ட தண்டனை வழங்கப்பட்டிருக்கலாம்.

ஆனால் இரண்டாவது காட்சியில் இங்கே கொடுக்கப்பட்ட அளவு கோலைக் கொண்டு பார்க்கையில் ஆசிரியர் பாதிக்கப்பட்ட மாணவன் மீது வேறுபட்ட நடத்தையைக் கையாண்டிருக்கலாம். ()



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிகப் பழைய மொழி
# தமிழ் மொழியா?

— "சிற்பி"

தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் தமிழர்கள். உலகின் மிகப் பழைய மொழிகளுள்ளே தமிழும் ஒன்று என அவர்கள் பெருமையுடன் கூறுவர். "சிவபெருமானால் அகத்திய முனிவருக்கு அருளப்பட்ட மொழி தமிழ்" என்ற நம்பிக்கை அவர்களிடமுண்டு.

ஆதிசிவன் பெற்று விட்டான் - என்னை
ஆரிய மைந்தன் அகத்தியன் என்றோர்
வேதியன் கண்டு மகிழ்ந்தே - நிறை
மேவும் இலக்கணஞ் செய்து கொடுத்தான்

— எனத் தமிழ்த் தாய் கூறுவதாகப் பாரதியார் பாடியுள்ளார்.

"கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன் தோன்றிய மூத்த குடி தமிழ்க்குடி" என்ற தொடர் தமிழ் இனத்தின் பழமையைச் சுட்டுகின்றது.

தமிழர்கள் தம் மொழிப் பற்றினாலும் இனப்பற்றினாலுமே தம்மை மிகப் பழையவர்கள் எனக் கூறுகின்றார்களா? அல்லது உண்மையின் அடிப்படையிலேதான் தங்களைப் பற்றிப் பெருமைப்படுகின்றார்களா?

மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் ஆண்டு விழா 1928 ஆம் ஆண்டில் நடைபெற்றது. சென்னை மாகாணத்தின் தற்காலிகத் தேசாதிபதியாகக் கடமையாற்றிய சேர் நோமன் எட்வேட் மார்ஷ் பாங்கஸ் என்ற ஆங்கிலேயர் தலைமை தாங்கினார். தமிழ் தெரிந்த அவர் தமிழிலேயே தம் தலைமை உரையை நிகழ்த்தினார்! தமிழ்த் தாத்தா உ. வே. சாமிநாதையர் தலைமையில் ஆராய்ச்சிக் கருத்தரங்கு நடைபெற்றது.

வரவேற்புரை நிகழ்த்திய மகா வித்துவான் மு. இராகவையங்கார் ஒரு கதையைச் சொன்னார்:

"ஓர் அரசன் இயற்கையான மொழி எது என்பதை அறிய ஆசைப்பட்டு, பேசத் தெரியாத குழந்தைகளை ஓரிடத்தில் அடைத்து வைத்தான்; தனித்தனியே அவர்களுக்கு உணவு கொடுத்து வந்தான். ஒரு நாள் பல உணவுப் பண்டங்களை ஓரிடத்தில் வைத்து, எல்லாக் குழந்தைகளையும் அங்கே கொண்டு வந்து விட்டான். அப்போது குழந்தைகள் எல்லாம் 'புகா, புகா' என்ற ஒலியை எழுப்பிக் கொண்டு ஓடி வந்தார்கள். உணவைக் குறிக்கப் 'புகா' என்ற ஒலியை அவர்கள் பயன்படுத்தியதைக் கண்டு அந்தச் சொல்லே இயல்பாக உணவைக் குறிக்கும் சொல் என்று உணர்ந்தான்" என்று கூறி தமிழில் சங்க நூலில் புகா என்பது உணவைக் குறிப்பதற்கு வரும் சொல் என்பதைச் சுட்டிக் காட்டி புஜ், பேக்கரி என்பனவெல்லாம் அதிலிருந்து பிறந்திருக்க வேண்டும்" என முடித்தார் இராகவையங்கார்.

மகா வித்துவான் மு. இராகவையங்கார் சேது சமஸ்தானத்து அவைக்களப் புலவராக இருந்தவர்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரியின் வரலாற்றை இனிய வெண்பாக்களால் ''பாரி காதை'' என்ற காப்பியமாகப் பாடியவர்; சாகுந்தலத்தை மொழிபெயர்த்தவர்; திருவடி மாலை, புவி எழுபது, இராச இராசேஸ்வரசேது பதியின் மேல் ''நாணிக்கண் புதைத்தல்'' என்ற துறையில் 400 பாடல்கள் கொண்ட துறைக் கோவை முதலியவற்றைப் பாடியவர்; மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடான 'செந்தமிழ்'' மாத இதழின் ஆசிரியராக இருந்து ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல எழுதியவர்; அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சிப் புலவராக இருந்த போது ''தமிழ் வரலாறு முதற் பகுதி'' யை எழுதிப் பலரின் பாராட்டைப் பெற்றவர்; சம்ஸ்கிருத வித்துவான்கள் நிறைந்த சபையொன்றிலே காளிதாசனின் கவிதையைப் பற்றிப் பேசி ''பாஷா கவிசேகரர்'' என்ற பட்டத்தையும் பெற்றவர். — இந்த விபரங்களை கி. வா. ஜகந்நாதன் தன் கட்டுரை ஒன்றிற் குறிப்பிட்டுள்ளார். இத்தகைய சிறப்புக்களையுடைய மகா வித்துவான் மு. இராகவையங்கார், தமிழைத் துறைபோகக் கற்ற அறிஞர்கள், ஆய்வாளர்கள் மத்தியில் ஆற்றிய உரை, தமிழ் மொழி, இயல்பாக அமைந்த மிகப் பழைய மொழி என்பதை உறுதிப்படுத்துகின்றது.

இற்றைக்கு 5000 ஆண்டுகளுக்கு முற்பட்ட மொகெஞ்சதாரோ, அரப்பா நாகரிகம், திராவிட நாகரிகமே என்பதைப் பெரும்பாலான ஆராய்ச்சியாளர்கள் உறுதி செய்துள்ளதையும் இங்கே குறிப்பிடுவது பொருத்தமாயிருக்கும். O

---

## வயது 60, ஆ!

உங்களுக்கு 60 வயது ஆகிவிட்டதா? வாழ்க்கையில் பெரிய சாதனைகள் ஒன்றையும் செய்யவில்லையே என்று கவலைப்படுகிறீர்களா? வேண்டாம். உங்களைப் பிரபலஸ்தராக ஆக்கிக் கொள்ள இன்னும் பல ஆண்டுகள் இருக்கின்றன.

அமெரிக்காவில் ஒரு ஆய்வு நிகழ்த்தப்பட்டது. பெரும் புகழ் வாய்ந்த 400 பேர் இந்த ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப் பட்டனர். பெரிய அரசியல் வாதிகள், எழுத்தாளர்கள், ஓவியர்கள், போர் வீரர்கள் கூட இவர்களில் அடங்குவர். இவர்களில் 35 வீதமானோர் தமது பெரும் சாதனைகளை 60 - 70 வயதுக் காலத்திலும்; 23 வீதமானோர் 70 - 80 வயதுக் காலத்திலும்; 8 வீதமானோர் 80 வயதுக்குப் பின்னரும் தங்களுடைய பெரிய சாதனைகளை நிறுவிப் புகழ் பெற்றவர்கள்.

எனவே,

அறுபது வயதாகி ஒய்வு பெற்று விட்டவர்களே, ஓய்ந்து விடாதீர்கள். உங்களுக்கு இன்னும் நிறைய எதிர் காலம் இருக்கிறது!

— வ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவக் குரங்கு

## எஸ். பி. கே.



அந்த மலைச்சாரலில் பலா மரங்கள் நிறைய வளர்ந்திருந்தன. அவற்றில் பழங்கள் நிறைய இருந்தன. பெண் குரங்கு ஒன்று பலாச் சுளைகளை உண்டும் அதன் இனிய மணத்தை நுகர்ந்தும் மகிழ்ந்து வாழ்ந்து வந்தது.

ஒரு நாள் மருத நிலத்திலிருந்து ஒரு கொக்கு அந்த மலைச் சாரலுக்கு வந்தது. அந்த கொக்கு இந்த மந்தி தங்கி வாழ்ந்து கொண்டிருந்த பழங்கள் நிறைந்த பலா மரம் ஒன்றின் கிளையில் வந்து அமர்ந்தது.

மருத நிலத்திலிருந்து வந்த கொக்கு தனியாக வரவில்லை. தான் விரும்பி உண்ணும் மீன் ஒன்றையும் எடுத்து வந்தது. அந்த மீனைப் பலா மரக் கிளையில் வைத்துக் கொத்திக் கொத்தி தின்னத் தொடங்கியது.

இறந்த மீன் வெறுக்கத்தக்க நாற்றத்தை வீசும் என்பது தெரிந்ததே. கொக்கு அந்த மீனை கொத்திக் கொத்தித் தின்ற போது நாற்றம் எங்கும் பரவியது.

காய் கனி கிழங்கு போன்றவற்றை உண்டு வாழ்ந்த குரங்கினால் - மீனையோ பிற புலால் உணவையோ உண்டு பழகாத காரணத்தால் - அந்த கெட்ட நாற்றத்தை தாங்கிக் கொள்ள முடியவில்லை. மீன் நாற்றம் கலந்து வந்த காற்று மந்தியின் மூக்கினுள் நுழைந்த போது அந்த நாற்றத்தைப் பழகி அறியாத குரங்கின் மூக்கிலிருந்து தும்மல்கள் வெளிப்பட்டன. மீனின் புலால் நாற்றத்தை தாங்கிக் கொள்ள முடியாமல் தொடர்ந்து தும்மியதால் அந்தக் குரங்கு பெரிதும் வருந்தியது.

நற்றிணையிலிருந்து வரும் இந்த சைவக் குரங்கு எமக்கு சிரிப்பையூட்டுகிறதா?

பாடல் இதோ

> கொழுஞ்சுளைப் பலவின்
> பயங்கெழு கவாதன்
> செழுங்கோள் வாங்கிய
> மாச்சினைக் கொக்கின்
> மீன் குடை நாற்றம்
> தாங்கல் செல்லாது
> துய்த்தலை மந்தி
> தும்மும் நாடு.

---

## திருவள்ளுவராண்டு

சென்ற இதழில், கி. பி. ஆண்டுடன் 21 வருடங்களைக் கூட்ட திருவள்ளுவராண்டு வருமென்று குறிக்சப் பெற்றுள்ளது. அச்சுப் பிழை 21 அல்ல 31 வருடங்கள் என்பதே சரியானதாகும். கூட்டுத் தொகை 2024 எனச் சரியாகவே தரப்பட்டுள்ளது. — ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுசிறு - செய்திகள்

## பூச்சி உண்ணும் தாவரங்கள்

O பூச்சிகளை கவர்ந்து அவற்றின் உடலில் உள்ள நைதரசனை பெற்றுக் கொள்வதனால் அத்தாவரங்கள் பூச்சி உண்ணும் தாவரங்கள் என அழைக்கப்படுகின்றன.

### நெப்பந்திஸ்

O இத் தாவரமானது சதுப்பு நிலங்களில் வாழ்கின்றது. மூடியை உடைய கெண்டி அமைப்பு இதன் விசேடித்த அமைப்பாகும். கெண்டி அமைப்பினுள் பூச்சிகளை விழச் செய்து அவற்றின் உடலிலுள்ள நைதரசனை உணவாகப் பெறுகின்றன.

### துரொசீரா

O இத் தாவரமானது ஈரமான மணலில் வாழ்கின்றது. இலைகளின் மேல் சுரப்பிக் கலங்களைக் கொண்ட பரிசைக் கொம்புகள் இதன் விசேடித்த அமைப்பாகும். இது பரிசை கொம்புகளினால் பூச்சியை பற்றி அவற்றை உணவாகப் பெறுகின்றன.

### யூற்றிக் குளோரியா

இத் தாவரமானது நன்னீரில் மிதந்து வாழ்கின்றது. இலைகள் திரிபடைந்து சவ்வுப் பைகளாக மாறி இருத்தல் இதன் விசேடித்த அமைப்பாகும். இது சவ்வுப் பைகளினால் பூச்சியை பற்றி அவற்றை உணவாகப் பெறுகின்றன.

இவ் மூவகைத் தாவரங்களுமே உலகிலே பூச்சி உண்ணும் தாவரங்களாக விளங்குகின்றன.

— இரஞ்சினி சாம்பசிவம்,
யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி

## நாடுகள் - விமான சேவைகள்

இலங்கை — எயர்லங்கா
இந்தியா — ஏயர் இந்தியா
ஜப்பான் — ஜப்பான் ஏயர் லைன்ஸ் (J.A.L.)
நெதலாந்து — K. L. M
அவுஸ்திரேலியா - குவான்ராஸ்
இங்கிலாந்து - பிரிட்டிஷ் எயார்வே
தாய்லாந்து — தாய் எயர்லைன்ஸ்
சவூதி, ஓமான், பஹ்ரான், குவைத், அபுதாபி, டுபாய் ] கல்வ் எயார்
பிரான்ஸ் — லுவ்தான்ஸா
கொரியா — வ்ளை கொரியான்

— தி. கலைமகள்
யாழ்/வேம்படி மகளிர் பாடசாலை

O இலங்கையில் முதன் முதல் எழுதப்பட்ட தமிழ் நூல் ''சரசோதி மாலை''

O மகாத்மா காந்தியின் சுயசரிதையைக் கூறும் நூல் ''சத்திய சோதனை''

O ஹிட்லரின் சுயசரிதையைக் கூறும் நூல் ''மெயின் கம்ப்'' (Main Camp)

தி. விஸ்வேதிதன்
பரி. யோவான் கல்லூரி, யாழ்.

✣ கி.பி. 1295 ம் ஆண்டு இங்கிலாந்தில் பாராளுமன்றம் அமைக்கப்பட்டது.

✣ கி.பி. 1492 ம் ஆண்டு கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்தார்.

✣ கி.பி 1802 ம் ஆண்டு இலங்கை முடிக்குரிய குடியேற்ற நாடாகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யது.

✣ கி.பி 1945 ம் ஆண்டு உலக வங்கி நிறுவப்பட்டது.

✣ கி.பி. 1964 ம் ஆண்டு சர்வ தேச நாணய நிதியம் நிறுவப்பட்டது.

செல்வன். தில்லைநாதன் கோபிநாத்
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

✳ ஒரு கல் கறியுப்பிலே (NaCl) 1000 மில்லியன் அணுக்கள் இருக்கும்.

✳ கரப்பான் பூச்சியின் இரத்தம் வெள்ளை நிறமாகும்.

✳ வானில் உள்ள நட்சத்திரங்களில் மிகப் பெரியது IRS 5 ஆகும். இது சூரியனை விட 10 000 மடங்கு பெரியது.

கஜவதனி சிவரத்தினம்
வேம்படி மகளிர் கல்லூரி.

O பச்சோந்தி பல நிறம் காட்டும். ஆனால் அதை விடத் தென் அவுஸ்ரேலியாவில் 'அயேர்ஸ்' பாறை (Ayers Rock) என்ற குன்று நாள் தோறும், காலந்தோறும் நிறம் மாறிக் கொண்டிருக்கிறதாம். இதைக் கண்டுபிடித்தவர் W.G கோஸ் என்பவர் (1873)

O ஒரு மனிதனுக்குத் தாடி வளர ஆரம்பித்தது முதல் வழிக்காமல் இருந்தால், அவனுடைய 70 வது வயதில் 96 K.m ஆகத்தாடி வளர்ந்திருக்கும்.

O 4000 ஆண்டுகளுக்கு முன் சீனாவில் தேயிலை கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் 1940 குள் இலங்கை சீனாவை மிஞ்சி விட்டது.

O 'எக்ஸ் கதிர்களை' 1895 ல் வில்ஹெய் கான்ராட் ரோன்ற்ஜென் என்ற ஜேர்மனிய விஞ்ஞானி கண்டு பிடித்தார். இதனால் 1901 ல் பௌதிகத் துறையில் முதல் நோபல் பரிசு இவருக்கு வழங்கி அறிமுகப்படுத்தப்பட்டது.

— மெ. கஜன்,
யா/ கனகரத்தினம் ம. வி.

O 'தமிழின் அண்ணா' என்று போற்றப்படும் அறிஞர் அண்ணாதுரை அவர்கள் கூட்டங்களிலே பேசும் பொழுது தமிழில் அதிகமாக அடுக்கு மொழிகளையே உபயோகிப்பார். இதனைக் கவனித்த பத்திரிகை நிருபரொருவர் ஒருநாள் அறிஞர் அண்ணாவைப் பேட்டிகாண வந்தார். ''தமிழில் அடுக்கு மொழிகளைப் பேசும் நீங்கள் ஏன் அவற்றை ஆங்கிலத்தில் உபயோகிப்பதில்லை'' என்று கேட்டார். ''ஏற்ற சந்தர்ப்பங்களிலே அவற்றை 'உபயோகிப்பேன்' என்றார் அண்ணா. உடனே நிருபர் கிண்டலாக ஆங்கிலத்தில் '' I am very sorry'' என்றார். உடனே அண்ணா புன்சிரிப்புடன், "I am not a lorry to carry your sorry' என்றார் சாதுரியமாக.


— ந. பிரியதீபன்
யா/ மத்திய கல்லூரி.

## மனத் திருப்தி

★ மனத் திருப்தி மிகவும் முக்கியம். ஒரு காரியம் வெற்றியில் அமைந்தாலும் சரி, தோல்வியில் அமைந்தாலும் சரி அதன் முடிவுகள் நம்மைப் பாதிக்கக் கூடாது ஏனென்றால் நாம் உண்மையாக முயற்சி செய்திருக்கிறோம். இப்படி எதிலும், எப்போதும் நாம் உண்மையாக இருக்கும் போது அளப்பரிய தன்னம்பிக்கை பெறுகிறோம். அதனால் நாம் தொடர்ந்து முயற்சி செய்து வெற்றி பெறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனிதரின் கடல் நண்பன்

படகில் சென்ற நான், படகு கவிழ்ந்து நடுக்கடலில் தத்தளித்தேன். திக்குத்திசை தெரியவில்லை. கரை எங்கு இருக்கின்றது எனவும் தெரியவில்லை. அவ்வேளை என்னருகில் வந்த 'டொல்பின்' என்னைச் சுற்றிச் சுற்றி வந்தது. தன் பின்னால் நீந்தி வருமாறு கூறுமாப் போல இருந்தது. நான் அதன் பின்னால் நீந்தினேன். நான் களைத்த போது அது எனக்காகக் காத்திருந்தது. நான் நீந்தத் தொடங்கியதும் அது வழிகாட்டிச் சென்றது. கரையை நான் அடைந்ததும் அது விலகிச் சென்று விட்டது. - தென்னாபிரிக்காவைச் சேர்ந்த றைற் சில்வர் என்பவரின் அனுபவமிது. இத்தகைய அனுபவங்கள் கடலில் திசை தெரியாது தத்தளித்த பலருக்கு ஏற்பட்டிருக்கின்றது. டால்பின்கள் நேசத்தோடு அப்படித்தவித்தவர்களுக்குக் கரை காட்டியுள்ளன.

டொல்பின் என்பது ஒரு சிறு திமிங்கலத்தை ஒத்த மீனினமாகும். இது ஏறக்குறைய எட்டு, எட்டரை அடி நீளமானதாக இருக்கும். இதற்குப் பற்களும் நீண்டு கூராக முடியும் அலகு போன்ற முன் முகமும் உண்டு. சாதாரணமாக டொல்பின்கள் கூட்டம் கூட்டமாக உலவுமியல்பின. பொதுவாக வெப்பவலயக் கடல்களிலும் இடைவெப்ப வலயக் கடல்களிலும் இவற்றைக் காணலாம்.

டொல்பின் கடல் வாழ் உயிரினங்களில் மிகவும் சாதுவாகும். சிறிய மீன்களை உணவாகக் கொள்ளும். மனிதருக்குத் தீங்கு செய்யாதது; மனிதரைக் கண்டால் ஏனோ நட்புக் காட்டும். படகுகளைச் சுற்றியும் கப்பல்களைச் சுற்றியும் இவை துள்ளிக் கும்மாளம் போடுவது அழகாக இருக்கும். உடம்பை வில்போல வளைத்துக் கொண்டு நீரின் மேல் இவை புரண்டு செல்லும். நட்புக் கலந்த குரலொலியை இவை எழுப்பும்.

டொல்பினை மீனவர்கள் பிடிக்கக் கூடாது எனப் பல நாடுகள் சட்டமியற்றியுள்ளன. என்றாலும், இவற்றைப் பிடித்து உண்பவர்களுள்ளனர். யாழ்ப்பாணக் கடலில் கூட சில வேளைகளில் டொல்பின் பிடிபடுகிறது. கடற்பன்றி என்று இவற்றை விற்கின்றனர்.

- ஹம்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பந்தம் பிடித்தல்

காக்கா பிடித்து முன்னுக்கு வந்தவர்கள் பற்றி நிறையக் கேள்விப்பட்டுள்ளோம். இதே போன்று பந்தம் பிடிக்காமல் முன்னேற முடியாத நிலை வேறெந்தத்துறைகளிலும் இருந்தனவோ, இல்லையோ தெரியாது, ஆனால் நாடகத்தில் - அதாவது கூத்தில் பந்தம் பிடித்தால்தான் முன்னுக்கு வரக்கூடிய நிலையிருந்தது.

இன்றைய கூத்துக்களில் அரங்கினை ஒளிரச் செய்ய காஸ் - விளக்குகள், மின்விளக்குகள் உண்டு. இவை கிடைப்பதற்கு முன் அரங்குகளை ஒளியூட்ட பந்தங்கள் பயன்படுத்தப்பட்டன. பாத்திரங்கள் வட்டக்களரியில் ஆடிவரும் போது பிரகாசமான வண்ணம் பூசப்பட்ட முகம், பார்வையாளருக்குத் தெரிவதற்காக ஒருவர் அப்பாத்திரத்தின் முன் பந்தம் பிடித்து வருவார். பாத்திரம் ஆடி வலம் வரும் போது பந்தம் பிடிப்ப வரும் ஆட வேண்டிய தேவையேற்பட்டது.

பிற்காலத்தில் இந்தப் பந்தம் பிடிப்போரும் இலாவகமான ஆட்டம் 'கைவரப் பெற்றவர்களாக' - அல்லது 'கால்வரப் பெற்றவர்களாக' சிறந்த நடிகர்களாக' நட்சத்திரங்களாக ஒளிவீசினர்!

- செல்லக்கண்டு செல்வதாஸன்
யா / வைத்தீஸ்வரக் கல்லூரி.

---

அறிவுக் களஞ்சியம்
5 இதழ்களுக்கான சந்தா
ரூபா 60/-

---

# யாழ்ப்பாணத்தில் கிரிக்கட்

இந்த வருடம் (1993) கிரிக்கட்டில் சதங்களால் நிரப்பப்பட்டுள்ளது. இந்த வருடம் மொத்தம் ஒன்பது சதங்கள் எடுக்கப்பட்டுள்ளன. விபரம் வருமாறு;

**1) இ. வரதன் (யாழ் இந்து)**

இவர் மொத்தம் 3 சதம் பெற்றுள்ளார். கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்திற்கு எதிராக ஒரு சதத்தையும் (104) நொட் அவுட், காட்லி கல்லூரிக்காக ஒன்றையும் (166) யாழ்ப்பாணக் கல்லூரியுடன் ஒன்றையும் (114) அடித்துள்ளார்.

**(2) திருகுமார் (யாழ் இந்து)**

யாழ் பரியோவான் கல்லூரியுடனும் (100) யாழ்ப்பாணக் கல்லூரியுடனும் (100 நொட் அவுட்) சதங்களைப் பெற்றவர்.

**3) மணிவதனன் (யாழ் மத்திய கல்லூரி)**

யாழ் இந்துக் கல்லூரியுடனும் (114) மானிப்பாய் இ. க உடனும் சதம் பெற்ற மத்திய கல்லூரி உதவித் தலைவராவார்.

**(4) சுரேஷ் (மத்திய கல்லூரி)**

வரலாற்றுப் புகழ் பெற்ற சென்ஜோன்ஸ் - சென்றல் போட்டியில் (101 நொட் அவுட்) சதம் எடுத்தவர். இச்சாதனை பாராட்டுக்குரியது.

**(5) மக்ஸி (பற்றிக்ஸ்)**

யாழ் இந்துவுடன் (100) சதம் எடுத்தார்.

— சோ. பதந்கன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயதுக்கேற்ப வாழ்க!

— "சண்முகத்தான்"

வாழ்வின் ஒவ்வொரு விடயங்களிலும் நாம் அவதானமாகவிருத்தல் வேண்டும். அவதானம் என்பதற்குப் பல அர்த்தங்கள் உண்டு. நம்மில் நாம் கவனமாயிருத்தல்! நம்மால் பிறர் துன்புறாமல் கவனமாக இருத்தல், நம்மைப் பற்றி பிறர் குறைவாக மதிப்பிட இடந்தராமல் இருத்தல்; நிதி நிலை பற்றி கவனம் செலுத்தல் போன்ற இன்னோரன்ன செயல்கள் இதில் அடங்கும்.

மனித வாழ்வை ஊழ் வினை வழி நடத்திச் செல்லும் என்பது ஆன்றோர் வாக்கு. ஆயினும் (இறைவன் நமக்கு தந்துள்ள) அறிவு என்னும் செல்வத்தைப் பயன்படுத்தி நம்மை நாம் வளம் படுத்திக் கொள்ளலாம்.

இன்னது செய்தால் இன்னது விளையும் என்ற எண்ணக் கரு எம்மில் இடம் பெற்றிருத்தல் வேண்டும்.

இளஞ்செடியை நாம் நன்கு வளர்த்துப் பயன்பெற வேண்டுமானால் அதற்கு உரிய காலத்தில் நன்கு தண்ணீர் பாய்ச்சுதல் வேண்டும்; உரமிடுதல் வேண்டும். காலம் தவறி பயிரிடுவதனாலோ, தண்ணீர் பாய்ச்சுவதனாலோ நாம் அடையும் பயன் யாதும் இல்லை. எனவே காலம் என்பது மனித வாழ்வில் மிக முக்கியமான அம்சம்.

இதனாலேதான் நம் முன்னோர் 'காலத்தில் பயிர் செய்' எனக் கூறினர்.

மனித வாழ்வில் வயதிற்கும் செயலுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

மாணவப் பருவத்து ஆசை அல்லது விருப்பம் வாலிபப் பருவத்தில் இராது. வாலிபத்தின் மிடுக்கு முதுமையில் இராது.

ஒவ்வொரு பருவத்திற்கும் வயதிற்கும் ஏற்பச் செயற்பாடு வெளிப்படும். வாலைப் பருவத்து அல்லது குழந்தைப் பருவத்துச் செயற்பாடுகளை வாலிப வயதிலோ அல்லது முதுமை வயதிலோ செய்யத்துணியின் அது ஏற்புடையதன்று. அது மட்டுமன்றி பருவத்திற்கு முரண்பட்ட செயல்களை ஒருவன் செய்ய முனையும் போது அவனைத் தரக் குறைவான மனிதன் எனச் சமூகம் கணிக்கும்.

எனவே மனிதன் மனிதனாக வாழ மனிதனாக தன்னைச் சூழவுள்ள சமூகத்தினால் கணிக்கப்பட அவன் தன் வயதிற்கு ஏற்ற நடத்தையுடையவனாக இருத்தல் வேண்டும்

இது அனைத்து வாழ்வின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் மிக இன்றியமையாதது.

## நண்டுகள்.........


நண்டுகள் நீரிலும், நிலத்திலும் வாழும். ஆனால் செங்கடலில் கரையோரப் பகுதிகளில் உள்ள நீல நண்டு என்ற ஒருவகை நண்டு, தண்ணீரில் இருந்து எடுத்த இரண்டு நிமிடங்களிலேயே இறந்து விடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்புலனறிவு - 2

ஒவ்வொரு நிரையிலும் ஐந்து உருக்கள் உள்ளன. ஒரு கூடு வெற்றிடமாகவுள்ளது. அக்கூட்டில் பொருத்தமாகக் கூடிய உரு 1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்ட உருக்களில் ஒன்றாகும். கண்டு பிடியுங்கள். விடை அடுத்த இதழில்.



## சென்ற இதழில் வெளிவந்த கட்புலனறிவு 1 இன் விடை

### கட்புலனறிவு - 1

சென்ற இதழின் (14) கட்புலனறிவுக்கான விடைகள்!

(1) — 3. (2) — 4.
(3) — 4. (4) — 2.
(5) — 3.

(நன்றி: க. இ.)

## அன்டோர்ரா

இது பிரான்ஸூக்கும ஸ்பெயினுக்குந் இடையில் உள்ள ஒரு நாடு. ஒரு தளபதி 6 சிப்பாய்கள் மற்றும் 4 அலுவலர்கள் ஆக மொத்தம் 11 பேரை மட்டுமே கொண்ட ராணுவம்; இவர்களிடம் துப்பாக்கி தவிர வேறு எந்த யுத்தத் தளபாடங்களும் கிடையாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் மீண்டும் மண்ணில் பிறப்போம்!

கௌடில்யன்

கொத்மலையைச் சேர்ந்த, நான்கு வயதுச் சிறுமி சுரங்கா, இருந்தாற்போல தன்னுடைய முற்பிறப்பைப் பற்றிப் பேசத் தொடங்கினாள். இது 1961 - ஆம் ஆண்டு நிகழ்ந்தது. 'தான் முற்பிறப்பில் கெலியட்ட என்ற கிராமத்தில், குணதிலக என்ற பெயருடன் சீவித்ததாகக்' கூறினாள். தனக்கு மனைவி, மக்கள் இருந்ததையும், தெரிவித்தாள். இவளுடைய பேச்சு பெற்றோருக்குக் கவலையைத் தந்தது. 'பேய் பிசாசு பிடித்து விட்டதோ' எனக் கவலைப் பட்டனர். சிறுமி சுரங்கா பௌத்த பிக்குவிடம் அழைத்துச் செல்லப்பட்டாள்; அவருடைய விசாரணையிலிருந்து பல தகவல்கள் வெளியாகின.

கெலியட்ட கிராமத்திற்கு அழைத்து வரப்பட்ட சிறுமி தன் முற்பிறப்பு வீட்டை அடையாளம் காட்டினாள்: வயதாகியிருந்த தனது மனைவியையும் அடையாளம் காட்டினாள். அவர்களுக்கு மட்டுந் தெரிந்திருந்த பல செய்திகளையும் தெரிவித்தாள். தான் எங்கு, எப்படி தென்னை மரத்திலிருந்து தவறி விழுந்து இறந்ததென்பதையும் எடுத்துரைத்தாள். அவள் வயதில் அவளுக்கு பேரப் பிள்ளைகளும் இருந்தன.

வியப்பான இச்செய்தி, மறு பிறப்புப் பற்றிய தகவல்களைச் சேகரித்து ஆராய்ந்து வரும் அமெரிக்கப் பேராசிரியர் அயன் ஸ்ரீவின்சனுக்குத் தெரிய வந்த போது, அவர் இலங்கைக்கு உடன் வந்தார். கொத்மலைச் சிறுமி பற்றிய ஆராய்ச்சியை மேற் கொண்டு வியப்படைந்தார்.

ஸ்விரீன்சன் மறுபிறப்புப் பற்றிய தகவல்களை ஆராய்வதில் 1950- இலிருந்து ஈடுபட்டு வருகின்றார். உலகெங்கும் வலம் வந்து இப்படிப் பட்ட முற்பிறப்புப் பற்றிய தகவல்களைத் தெரிவிப்போரை ஆராய்ந்து. அவற்றின் மெய்மையை வெளியிட்டுள்ளார். இது வரை 2400 இத்தகைய மறு பிறப்பு நிகழ்வுகளை இவர் ஆராய்ந்து 5 பெருந்தொகுதிகளை வெளியிட்டிருக்கிறார். அவருடைய தொகுதிகளில் இலங்கையில் மறு பிறப்புப் பற்றிய பத்து நிகழ்வுகளுள்ளன.

இலங்கையில் மறு பிறப்புச் செய்திகளை நினைவு கூர்ந்த 200 பேரை அவர் ஆராய்ந்தார். இவற்றில் பெரும்பாலானவை தென்னிலங்கையைச் சேர்ந்தவை. 1973 - இல் யாழ்ப்பாணம் வந்து, மறு பிறப்பு நினைவு வந்த சிலரை முதன் முறையாகப் பேட்டி கண்டார்.

ஒரு தகவலில் ஒரு சிறுவன் தான் முற்பிறப்பில் எப்படி, எங்கு, எவரால் கொலை செய்யப்பட்டான் என்பதைத் தெரிவித்தான். விசாரித்த போது அது உண்மை எனத் தெரிந்தது.

ஒரு தகவலில், ஒரு சிறுமி தான் முன் பின் அறிந்திருக்காத கிராமத்தின் பெயரைத் தெரிவித்து தான் முற்பிறப்பில் அங்கு பிறந்திருந்ததாகத் தெரிவித்தாள். அங்குள்ளவர்களின் பெயர்களையும் கூறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறு பிறப்பு என்பது உண்மையா?

னாள். அவளை அங்கு அழைத்துச் சென்றபோது தான் விளையாடிய பொருட்களைச் சரிவர அடையாளம் காட்டினாள். அந்த வீட்டின் வளவின் முன்னர் நின்றிருந்த 'மரம் இப்போது எங்கே?' எனக்கேட்டாள். அது தறிக்கப்பட்ட செய்தி வெளிவந்தது.

இன்னொரு தகவலில், ஒரு சிறுவன் தான் முன்பு பிறந்திருந்த கிராமத்தையும் வீட்டையும் அங்கிருந்தவர்கள் விபரங்களையும் தெரிவித்தான். தான் மரணமாகும் போது, தனக்கு 6 வயதில் ஒரு மகள் இருந்தாள் எனவும் தெரிவித்தான். அவன் அங்கு அழைத்துரைப்பட்ட போது, அவன் தெரிவித்த தகவல்கள உண்மையென தெரிய வந்தன.

மறுபிறப்புப் பற்றிய தகவல்களைத் தெரிவிப்போர், விபத்துகளில் அகால மரணம் அடைந்தவர்களாகவே இருக்கிறார்கள், கனவுகளிலிருந்தும் சிலர் தமது முற்பிறப்புப் பற்றிய தகவல்களைப் புரிந்து கொண்டாடுகிறார்கள். மேலைத் தேசங்களில் ஒரு குழந்தை தனது முற்பிறப்புப் பற்றிப் பேசுவதை அறிந்தால் அதன் பெற்றோர் 'அதற்குச் சித்தம் குழம்பி விட்டது. என நினைக்கின்றனர். மனநோயும் புலம்பலுக்குக் காரணமாயினும், முற்றாக மனநோய் எனத் தள்ளி விட முடியாத நிகழ்வுகளுள்ளன எனப் பேராசிரியர் ஸ்ரீவின்சன் கருதுகிறார்.

சில குழந்தைகள் தமது முன்னைய பிறப்புப் பற்றித் தெரிவித்த தகவல்கள், ஆராய்ந்த போது தவறானவை எனவும் தெரிய வந்துள்ளன, சில முற்பிறப்பு நினைவுகளில் தாம் மிருகங்களாக இருந்ததாகச் சிலர் கூறியுள்ளனர்.

பலாங்கொடவில் உக்கல் கல்போட்ட என்ற ஊரில் விஜயரத்ன என்பவரின் தகவல் வியப்பானது. உண்மையானதும் ஆகும். விஜயரத்னவுக்கு இரண்டரை வயசு நடந்த போது அவன் தனது வீட்டை அடிக்கடி சுற்றி வருவதுடன் தனக்குள் பேசியும் கொண்டான். அவனுடைய நடத்தை தாய்க்கு வியப்பைத் தந்தது. அவன் பேசுவதைக் கேட்டாள். அவன் தன்னுடைய கரம் ஒன்று வளர்ச்சி இன்றியிருப்பதற்குக் காரணம், தான் முற்பிறப்பில் தனது மனைவியால் கொலை செய்யப்பட்டது என்றான். அவர் அக்கொலை பற்றி அவன் அறியாத பல தகவல்களைக் கூறினான். அவள் தனது கணவனிடம் அது பற்றி விசாரித்த போது உண்மை வெளியாயிற்று. தனது இளைய சகோதரன் றற்றான்காமி 1988 இல் அவனுடைய மனைவியால் கொலை செய்யப் பட்டான் எனத் தெரிவித்தான். ஸ்ரீவின்சன் இந்தத் தகவலை ஆராய்ந்தார். அக்குழந்தையின் வலது கன்னத்தில் கத்தியால் குத்தப் பட்டு ஆறியவடு போன்று பிறப்பு அடையாளமிருந்தது. அக்குழந்தையின் வலது கரம், இடது கரத்திலும் பார்க்கச் சில அங்குலம் குட்டையாகவும் இருந்தது.

மறு பிறப்புப் பற்றிய தகவல்களை நம்ப முடியாது என்பது ஆராய்வதற்குரியது ஆனால் நிருபிக்கப்பட்ட தகவல்கள் வியப்பானவை. ஆன்மா அழிவதில்லை; அது மறுபடி மறுபடி பிறக்கிறது என்ற தத்துவம் உண்மை என்பதை நவீன விஞ்ஞானம் நிரூபிக்குமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூப்பர் கணனி

25 ஆராய்ச்சி நிறுவனங்களின் உதவியுடன் இந்தியா தனக்கென்று ஒரு சூப்பர் கணனியை முதன் முதலாக உற்பத்தி செய்துள்ளது. "பரம் - 8600" என்று பெயரிடப்பட்டுள்ள இந்த சூப்பர் கணிப்பொறி ஒரு செகண்டில் 6 பில்லியன் கணக்குகள் போடக் கூடியது. "பரம்" கம்ப்யூட்டர் ரஷ்யா, ஜெர்மன், பிரிட்டன், கனடா போன்ற நாடுகளிலும் இந்தியாவில் 20 நிறுவனங்களிலும் பணிபுரிகிறது.

## தலாக்

ஒரு முஸ்லீம் கணவன் தனது மனைவியைப் பார்த்து மூன்று முறை தலாக், தலாக், தலாக் என்று சொன்னால் அது மண முறிவு ஆகிவிடாது. இது வரை அப்படி எண்ணப்பட்டு வந்துள்ளது முஸ்லீம் மத அறிஞர்கள் ஒன்று கூடி ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள். முதல் முறை சொன்ன தலாக்கிற்குப் பிறகு ஒரு மாதம் உறவு இல்லாமல் பிரிந்திருக்க வேண்டும். இப்படிப் பல நிபந்தனைகள் கழித்துத் தான் மூன்றாம் முறை "தலாக்" சொல்லலாம். இது தான் சட்டம் என்கிறார்கள்.

## தேசிய விழாக்கள் நிறைந்த நாடு

தென் கிழக்காசியாவில் ஒரு நாடு தாய்லாந்து. தேசியக் கலாசாரப் பற்று மிக்க நாடு. மாதத்தில் பல விழாக்களையும் வைபவங்களையும் நடத்தி மகிழும், நாடு.

ஆண்டிலும் சித்திரை - (ஏப்ரில்) மாதமே புது வருடம் பிறக்கும். இதனை சந்திர வருசம் என்பர். அன்றைய தினம் மக்கள் எல்லோரும், ஆளுக்கு ஆள் தண்ணீர் தெளித்து மகிழ்வர். வட இந்தியாவில் 'ஹோலி' பண்டிகை போல் தாய்லாந்தின் 'தண்ணீர் தெளிப்பு'ம் இருக்கும். வைகாசி (மே) திங்களில் அங்குள்ள 'சனாம்யுவால்' என்ற திருத்தலத்தில் ஏர்பூட்டி விழா நிகழும். இத்தேசிய விழாவில் அரசர் வருகை தந்து ஏர் பிடித்து நிலம் உழுவார். நாட்டின் பட்டி தொட்டி எல்லாம் விழாக்கோலம் பூண்டு விளங்கும். இதே மாத இறுதியில் மழையை வேண்டி ஒரு விழா நடை பெறும். அப்பொழுது, வானில் காகிதப் பட்டங்களும் 'றொக்கட்'களும் செறிந்து பறக்கும்.

கார்த்திகை மாதத்தில், நீர் நிலைகள் யாவும் தீபங்களால் ஒளிரும். நீர் நிலைகளில் வாழையிலைகள் மிதக்கும். அதில், மெழுகு வர்த்தி, நாணயம், சாம்பிராணி வர்த்திகள், மலர்கள் என வைத்து தீப அலங்காரஞ் செய்யப்படும். எருமை ஓட்டப் பந்தயங்கள், நீள் வள்ள ஓட்டப் பந்தயம்.........இப்படிப் பல பந்தயங்களும் விழாக்கோலம் பூணும் நாடே தாய்லாந்து.

தொகுப்பு: 'அநு . வை . நா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லெனின் என்றொரு மாமனிதன்



கம்யூனிசக் கொள்கையை நிறுவிய உலகப் புகழ் பெற்ற பேரறிஞர் கார்ல்மாக்ஸ் என்பவரின் சீடராக லெனின் விளங்கினார். இவருடைய முழுப் பெயர் விளாடிமர் இலியீச் உலியனாவ். ருசியாவில் 1917 இல் நிகழ்ந்த அக்டோபர் புரட்சியை உருவாக்கி ருசியாவை கம்யூனிச நாடாக்கி சோவியத் குடியரசை நிறுவிய பெருமை லெனினுக்குரியது. 1870, ஏப்ரல், 9 இல் இவர் உலியானவ்ஸ்க் என்ற ஊரில் பிறந்தார்.

உலகின் நிலப்பரப்பில் ஏறத்தாழ ஆறிலொரு பகுதியைக் கொண்டிருந்த ருஷியப் பேரரசில் சர்வாதிகார முடியாட்சி முறையே நிலவியது. சமுதாயத்தில் இரண்டு வகுப்புக்கள் காணப்பட்டன. பிரபுக்களும் தனவந்தரும் உயர் வகுப்பில் இடம் பெற்றனர்; விவசாயிகளும் தொழிலாளர்களும் அடுத்த வகுப்பில் இடம் பெற்றனர். இவர்கள் சலுகைகளும் உரிமைப் பேறுகளும் மற்று நசுக்கப்பட்டனர்.

முதலாம் உலகப் போரில் ருசியா பங்கு கொண்டமையால் உள்நாட்டுப் பிரச்சினைகள் உக்கிரம் பெற்றன. ருசியாவின் கொடுங்கோன்மை ஆட்சிக்கு முடிவு கட்டி, மக்களாட்சியை நிறுவுவதில் லெனின் முன்னின்று உழைத்தார்.

மார்க்சிய வழியைப் பின்பற்றிய பொல்ஷெவிக் கட்சியும், அதன் தலைவரான லெனினும் பெரும் அரசியற் சமூக மாற்றத்தை 1917 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதி ஒரு பெரும் புரட்சி மூலம் சாதித்தனர். விவசாயிகளும் தொழிலாளர்களும் ஒருங்கிணைந்து ருசியாவில் அரசன் ஆட்சியை அற்றுப் போகச் செய்தனர். அதனால் உலகில் முதலாவது பொதுவுடமைத் தொழிலாளர் ஆட்சி நிறுவப்பட்டது. விவசாய வர்க்கத்தையும் தொழிலாள வர்க்கத்தையும் சேர்ந்தவர்களுடைய நலன் கருதி அவர்களாலேயே கொண்டு நடாத்தப்படுகின்ற ஓர் ஆட்சியை ஏற்படுத்த லெனின் காரணமாயினார்.

கூர்மையான விழிகள், பலம் நிறைந்த உடல், நடுத்தர உயரம், சோர்விலா உழைப்பு கொண்ட லெனின் 1924 ஜனவரி 21 ஆம் நாள் மாஸ்கோவின் கார்க்கி கிராமத்தில் மரணமானார். அவருடைய உடல் தைலமிடப்பட்டு ஒரு அழகான பேழையில் எல்லாரும் பார்க்கத்தக்கதாக வைக்கப்பட்டது. லெனின் கிராட் என்ற நகரம் அவர் பெயரில் உருவாக்கப்பட்டுள்ளது. ○

## எரிமலைச் செடி

ஜப்பான் நாட்டில் எரிமலைச் செடி என்று ஒருவகை செடி காணப்படுகிறது. இது 30 அடி உயரம் வரை வளரும். சூரியன் மறைந்ததும் இந்தச் செடியின் நுனியில் இருந்து வெண்ணிறமான புகை வெளிவருகின்றது. அதனால் ஜப்பானியர்கள் இதனை எரிமலைச் செடி என அழைக்கின்றார்கள்.

.. சி. சுரேந்திரன்.
சென்பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்டோயின் லோறன்ற் லவோசியர்

பத்மினி கோபால், பி. எஸ்ஸி

லவோசியர் 1743ம் ஆண்டு பரிஸ் மாநகரில் மிக வசதியான ஒரு குடும்பத்தில் பிறந்தார். சிறு வயதில் தாயை இழந்து தந்தையாலும் மாமியாலும் மிகவும் செல்லமாகப் போற்றி வளர்க்கப்பட்டார். தந்தையாரது விருப்பப்படி சட்டம் பயின்றாலும் அவரது அக்கறை விஞ்ஞான ஆய்விலேயே இருந்தது. சட்டம் படிக்கும் போதே இரசாயனப் பேராசிரியர் விஞ்ஞானக் கழகத்தில் நடத்தும் விரிவுரைகளைத் தவறவிடமாட்டார். தனது 23 வது வயதிலேயே பரிஸ் நகரத் தெரு விளக்குகள் போடுவது தொடர்பாக நடத்தப்பட்ட திட்டமிடல் போட்டியில் முதல் பரிசு பெற்றார். இதனால் பரிஸ் விஞ்ஞானக் கழகத்தில் அங்கத்தவரானார்.

பிரான்ஸ் நாட்டின் புவி உட்கூற்றியல் (Geological) ஆய்வை நடாத்தச் சென்ற பேராசியருக்கு உதவியாளராக அனுப்பப்பட்டார். இவ்வாறு பிரான்ஸ் நாட்டின் பல பகுதிகளையும் சுற்றிய போது கிப்ஸம் பற்றியும் பிளாஸ்டர் ஒப் பரிஸ் பற்றியும் பல ஆய்வுகளை வெற்றிகரமாகச்செய்து முடித்தார். பிரதி பலன் எதிர்பாராது தன் சொந்தச் செலவிலேயே சென்று புவி உட் கூற்றியல் ஆய்வுகளுக்கு உதவினார்.

இதனாலும் இவரது குடும்பத்தின் உயர் அந்தஸ்தினாலும் இவருக்கு பிரதான வரியிறுப்பாளர் வேலை வழங்கப்பட்டது. ஒரு சில ஆவணங்களில் மட்டும் கையெழுத்துப் போடும் இவ் வேலையினால் லவோசியருக்கு விஞ்ஞான ஆய்வுகளுக்கு நிறைய நேரம் கிடைத்தது.

மாறி அன்னி போல்ஸ் என்னும் பெண்ணை விரும்பி மணந்தார். மாறி பல விதத்திலும் இவருக்கு உற்ற துணைவியாக அமைந்தார். மாறி பன்மொழிப் புலமை உள்ளவர். ஆங்கிலம் நன்றாகக் கற்றவர். ஆகையால் காவெண்டிஸ் பிறிஸ்றலி ஆகியோரது ஆக்கங்களை பிரஞ்சு மொழியில் மொழிபெயர்த்து கணவருக்கு உதவினார். பிரஞ்சு நாட்டு விஞ்ஞானிகளும் மற்றைய நாட்டு விஞ்ஞானிகளும் சந்திக்கும் இடமாக இவர்கள் இல்லம் அமைந்தது.

லவோசியர் தகனத்தைப் பற்றி விரிவாகவும் ஆழமாகவும் ஆராய்ந்தார். புளோஜிஸ்டன் என்பது ஒரு பொருள் போன்றதென்றும் இது தான் தகனம் நடைபெறக் காரணம் என்றும் அக்கால விஞ்ஞானிகள் நம்பி இருந்தனர். கவென்டிஸ் பிறிஸ்றலி போன்ற லவோசியரது சமகாலத்தவரும் அதில் நம்பிக்கை உள்ளவர்களே.

இவர் தனது பரிசோதனைகள் மூலம் தகனத்தில் வளியின் 1/5 பங்கு பயன்படுத்தப்படுகிறது என எடுத்துக் காட்டினார். பல பொருட்கள் தகனம் அடையும் போது பெறுபேறுகளின் நிறை கூடுதலாக இருக்கும் என எடுத்துக் காட்டினார். வெள்ளொ்சி

(மறுபக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாஜ் மகால்

உலகில் உள்ள அழகான கட்டிடங்களில் ஒன்றாகத் 'தாஜ் மஹால்' கருதப்படுகிறது. இது முழுவதும் சலவைக் கற்களால் கட்டப்பட்ட கட்டிடம் ஆகும். இது உத்தரப் பிரதேச மாநிலத்தில் உள்ள ஆக்ரா என்னுமிடத்தில் யமுனை நதிக்கரையில் அமைந்துள்ளது. மொகலாய மாமன்னர் "ஷாஜகான்" இறந்த தன் மனைவி 'மும்தாஜின்' நினைவாகக் கட்டிய கட்டடம் ஆகும். மும்தாஜ் என்றால் 'அரண்மனையின் அணிகலன்' என்பது பொருள்.

பெரும் செலவில் மொகலாய பாணியில் இக்கட்டிடம் உருவாக்கப்பட்டுள்ளது. இதனைக் கட்டி முடிக்க 21 ஆண்டுகள் பிடித்தன. ஆசியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், பாரசீகத்திலிருந்தும் கட்டிகள் கலைஞர்கள் வந்து கட்டிடத்தை அழகு படுத்தினர். முழுவதும் சலவைக் கல்லால் ஆன இக் கட்டிடத்தின் உட்பகுதி மிக அழகிய பூவேலைப்பாடுகளைக் கொண்டுள்ளது. இஸ்லாமிய இறை மறையான திருக்குர்ஆன் வாசகங்களும் பொறிக்கப்பட்டுள்ளன. நிலவொளியில் தாஜ்மகால் மிக அழகாகக் காட்சியளிக்கும்.

இக்கட்டிடத்தைச் சுற்றிலும் வண்ணக் கற்கள் நடைபாதைகளில் பதிக்கப்பட்டுள்ளன. அழகிய பூந்தோட்டங்கள் சூழ அமைந்துள்ளன. நீர்த்தடாகங்களும் அவற்றில் நிழலாடும் தாஜ்மஹால் தோற்றமும் கண்கொள்ளாக் காட்சியாகும். 'தாஜ்மஹாலின்' கீழ்ப்பகுதியில் 'மும்தாஸ்' புதைக்கப்பட்டுள்ளார். அவருக்கு அருகிலேயே ஷாஜகானும் புதைக்கப்பட்டுள்ளார்.

— மெ. கஜனி

---

அன்டேயின் ...... (முற்பக்கத் தொடர்)

களை வைத்துப் பல பரிசோதனைகளை உணவு - சக்தி தொடர்பாகச் செய்தார். உடலில் சேர்க்கப்பட்டிருக்கும் உணவு ஆக்சிஜனில் எரிக்கப்படுவதாலேயே உடல் வெப்பம் தோன்றுகிறது எனவும் இவர் எடுத்துக்காட்டினார்.

கவென்டிஸ் பிறிஸ்ட்லி ஆகியோருடன் ஏற்பட்ட நட்பினால் அவர்களால் கண்டு பிடிக்கப்பட்ட வாயுக்களுக்கு ஐதரசன் என்றும் ஒட்சிசன் என்றும் பெயர் சூட்டியவரும் இவரே. பிரான்ஸின் முன்னேற்றத்துக்காக அயராது பாடுபட்ட இவர் பிரதான வரியிறுப்பாளராக இருந்தமையினால் பொறாமையுடைய தனிப்பட்ட எதிரியினால் தேசத்துரோகி எனக் குற்றம் சாட்டப்பட்டு பிரெஞ்சுப் புரட்சியின் போது சிறையில் அடைக்கப்பட்டார்.

இவரை விடுவிக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் எதுவும் பலன் அளிக்கவில்லை. சிறையில் இருந்த போது தனது ஆய்வுகளைத் தொகுத்து ஒரு கட்டுரை எழுதினார்.

இவர் தலை துண்டிக்கப்பட்டு இறந்த பின்பும் மாறி இவரது இறுதிக் கட்டுரையையும் வேறு பலவற்றையும் சேர்த்துக் தொகுத்துப் புத்தகமாக வெளியிடுவித்தார். இவர் இறந்து 2 வருடங்களின் பின் பிரஞ்சு அரசு இவருக்கு ஞாபகச் சின்னம் அமைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசைக் கலை

○ துஷிதா

வாழ்வின் மொழி பெயர்ப்பே கலை என்பர். உள்ளத் துடிப்பின் வெளிப்பாடு, உணர்ச்சியின் உருவகம் என்றும் கூறலாம்.

வாழ்க்கையின் பல்வேறு கோணங்களிலிருந்தும் எழும் அனுபவத்தில் பிறந்து, கற்பனையுடன் கலந்து பிறர் மனத்திலும் அவற்றை உணர்ச்சி பூர்வமாகப் புகுத்துவது தான் உயர்ய கலைப்படைப்பாகும்.

ஆதி மனிதன் காட்டில் அலைந்து திரிந்த காலத்திலே வெறும் ஒலிகளாகவும் ஓலமாகவும் பிறந்த மகிழ்ச்சிக் கூச்சல் நாளடைவில் நாகரிக வளர்ச்சிக் கேற்ப ராகம், தாளம், பாவம் முதலிய விதிகளுடன் உயிர் பெற்று வளர்ந்து வளர்ந்துள்ளது.

இத்தகைய இசைக்கலையானது செவிக்கு மட்டுமன்றி மனதுக்கும் இன்பந்தரும் இன்கலையாகும்.

இக்கலையானது மனித வாழ்வுடன் பின்னிப் பிணைந்துள்ளது. உள்ளம் சோர்வுறும் பொழுதும் உடலம் தளர்வுறும் பொழுதும் அவற்றைப் போக்கிப் புத்தூக்கமளிக்கிறது. ஆன்மா வோடியைந்து சுவையுணர்ச்சிகளைத் தூண்டிப் புத்துயிரளிக்கிறது. இவ்விசைக்கலை இறைவனைத் தொழவும் முதன்மையான கருவியாகக் கொள்ளப்படுகிறது. தெய்வீகக் கலையாக எண்ணப் பெறும் இக்கலையின் இன்றியமையாத கூறு இராகமேயாகும்.

இராகங்கள் ஜனகராகங்கள், ஜன்னிய ராகங்கள் என இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப் பெற்றுள்ளன. இந்திய இசையில் காணப் பெறாத இராகமோ, மேளமோ, தாளமோ வேறெங்கும் காணமுடியாதென்பர். இவ்விராக முறையும் 72 மேள முறையும் இசையுலகிற்கு இந்தியா வழங்கிய இன்கொடையெனில் மிகையாகாது. தூய இசை உண்டாவதற்கு வழிகாட்டியாக அமைவதும் இராகமே. இவ்விராகங்களைப் பழந்தமிழ் 'பண்' எனக் கூறும். பண் இசைத்தவரைப் பாணர், பாடினியர் எனும் பழந்தமிழ், பல்வகை யாழ்களையும் குழல்களையும் பயன் படுத்திக் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனும் எழுவகைப் பண்களை இவர்கள் இசைத்தனர் என்கிறது. இவற்றிலிருந்து பிறந்தனவே திறங்கள்.

இசையை நாட்டியத்தின் கூறாகக் கருதும் பரத முனிவர் இசையில்லா நாட்டியத்தை வெறும் உடற் பயிற்சியாகவே கருதுகிறார். நடனத்துக்கும் நாடகத்துக்கும் இசை இன்றியமையாதது. ஸப்த ஸ்வரங்கள் எவ்வாறு பயன் படுத்தப் படவேண்டும் எனக் கூறும் பரதர் ஸ, ரி இரண்டும் அற்புதம், வீரம் பயங்கரம் முதலியவற்றையும் க, நி சோகத்தையும் ம, ப காதல், மகிழ்ச்சி என்பவற்றையும், த, பயங்கரம், அருவெறுப்பு ஆகியவற்றையும் வெளிப்படுத்தப் பயன்படுத்தப்பட வேண்டுமென்கிறார். இசைக்கு வேண்டப் பெறும் தாளம் பற்றிப் பரதர் கூறுகையில் 108 தாளங்கள் பற்றிக் கூறுவதுடன் அத்தாளம் அமையாவிடில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டியத்திற்கு உயிரேயில்லை என்றும் கூறுகிறார்.

இசை நாடகங்களில் மிக நீண்டது நாராயண தீர்த்தரின் கிருஷ்ணலீலா, தரங்கிணி என்னும் மகா வைத்தியநாதஐயர் இயற்றிய 72 மேளராக மாலிகையும் இராமசாமி தீட்சிதரின் 108 ராக தாள மாலிகையும் மிக நீண்ட உருப்படிகளாகுமென்றும் கூறுவர்.

திருப்பதியிலிருந்த தாளம் பாக்கம் பாட்டாசிரியர்களே முதன் முதலாகப் பல்லவி, சரணம் என்னும் உறுப்புகளுடன் கீர்த்தனங்களை இயற்றினரென்றும் பின்னர்ப் புரந்தரதாசரே அவற்றுடன் அனுபல்லவியையும் சேர்த்தாரென்றும் கூறுவர். இவர் தான் அப்பியாசகான உருப்படிகளை முதலில் செய்தவராவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இத்தகைய இசைக்கலையானது அயல் நாட்டவரின் ஆதிக்கத்தாலும் உள்நாட்டவர் ஊக்கக் குறைவாலும் வேற்றுமொழி இசை வந்து வேரூன்ற இடமளித்தது. தனித்தமிழின் இடத்தை வடமொழியும், தெலுங்கும் பெற்றன. 13ம் 14ம் நூற்றாண்டுகளில் தமிழ் நாட்டில் ஏற்பட்ட அரசியல் குழப்பங்களால் இசைப் பாக்கள் வளரவில்லை. 15ம் நூற்றாண்டில் அருணகிரிநாதர் தோன்றி திருப்புகழ் என்னும் சந்தப் பாக்களால் தமிழிசைக்குப் புத்துயிரளித்தார். 16ம் நூற்றாண்டில் பதினெண் சித்தர்கள் இனிய கருத்துக்களைச் சிந்து முதலிய இசைப்பாக்களில் வெளியிட்டனர். சாதாரண மக்கள் உள்ளத்தைச் சித்தர் பாடல்கள் கவர்ந்தன. பின்பு தமிழிசை தாழ்ச்சியடைந்தது. தமிழ் நாட்டு இசையுலகில் அமிழ்தினும் இனிய தமிழிசை மறைந்து போகக் கர்நாடக இசை மலர்ந்தது. அடுத்து முத்துத் தாண்டவர் அருணாசலக் கவிராயர் ஆகியோர் 18ம் நூற்றாண்டில் தோன்றி தமிழ் இசையைத் தழைக்க வைத்தனர்.

அடுத்து "சங்கீத மும்மூர்த்திகள்" என அழைக்கப்படும் தியாகராஜ சுவாமிகள், முத்துச்சாமி தீட்சிதர், சியாமா சாத்திரிகளின் காலம் மலர்ந்தது. இவர்கள் தெலுங்கிலும் வடமொழியிலும் ஏராளமான உருப்படிகளை இயற்றிக் கர்நாடக இசையை வளர்த்தனர். ஆனால் தமிழிசையை மீண்டும் தளிர்விடச் செய்து, தழைக்கச் செய்த பெருமை முக்கியமாக கோபால கிருஷ்ண பாரதியையே சாரும். இவரின் "நந்தனார் சரிதக் கீர்த்தனைகள்" பாமர மக்களிடையிலும் அமோக ஆதரவைப் பெற்றன. கோபால கிருஷ்ண பாரதியைத் தவிர 19ம் நூற்றாண்டில் தமிழிசைப் பாக்களை இயற்றியவர்களுள் ஆனை ஐயா, இராமசாமி சிவன் கனம் கிருஷ்ணய்யர், மாயூரம் வேதநாயகம்பிள்ளை, சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார், இராமலிங்க அடிகளார் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். இவர்களின் அருமுயற்சியால் நம் செட்டி நாட்டரச இராஜாசர் அண்ணாமலை செட்டியார் அவர்களின் ஊக்குவிப்பாலும் நாடெங்கும் தமிழிசை மன்றங்கள் தோன்றின. இசையரங்குகளில் மீண்டும் தமிழிசைப் பாடல்கள் ஒலிக்கத் தொடங்கின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரித்தானியர் ஆட்சியில் யாழ்ப்பாணம்

“புத்தொளி”

பிரித்தானிய ஆட்சியின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணம் எப்படி இருந்தது என்பதை அறியும் போது பல சுவையான தகவல்கள் நமக்குக் கிடைக்கின்றன.

மனிதன் செய்யும் குற்றங்களுக்காக வழங்கப்பட்ட சித்திரவதைத் தண்டனை 1803ல் நிறுத்தப்பட்டது. குற்றங்களை விசாரித்துத் தண்டனை வழங்குவதற்காக பொலிஸ் நீதிமன்றங்கள் யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, முல்லைத்தீவு, பருத்தித்துறை, சாவகச்சேரியில் 1841ம் ஆண்டு ஆடி மாதம் 13ந் திகதி ஆரம்பிக்கப்பட்டன. விதானையார் முறை 1806ல் ஒவ்வொரு கிராமத்திலும் அமுலுக்கு வந்தது. சேர் அலெக்ஸாண்டர் யோன்ஸ்ரோன் யூரி முறையை 1812ல் ஏற்படுத்தினார். இராஜகாரிய முறை - அரசிற்கு இலவச சேவை செய்வது - 1802ல் ஒழிக்கப்பட்டது.

பிரயாணங்கள், தபால் கொண்டு செல்வதெல்லாம் மாட்டு வண்டியிலேயே இருந்தன. யாழ்ப்பாணத்திலிருந்து கண்டிக்கு வண்டியில் போய்வர இருபது அல்லது முப்பது நாட்கள் சென்றன. யாழ்ப்பாணத்திற்கும் மாத்தளைக்கும் தபால் கொண்டு செல்வதற்கு 1878ல் அனுமதிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேசன்துறை, பருத்தித்துறைக்கு கால்நடையாகவே தபால்கள் எடுத்துச் செல்லப்பட்டன. ஒரு மணித்தியாலம் 2½ மைலைக் கடக்கவே அவர்களால் முடிந்தது.

யாழ்ப்பாணத்தில் ஆசைப்பிள்ளை என்பவர் குதிரை வண்டிச் சேவையை முதன் முதல் நடாத்தினார். படிப்படியாக முன்னேறி யாழ்ப்பாணத்திலிருந்து மாத்தளைக்கும் குதிரை வண்டிச் சேவையை விஸ்தரித்தார். பணக்காரர்கள் பல்லக்குகளை உபயோகித்தனர். அரச உத்தியோகஸ்தர்களில் நீதிவான், பிரபுக்கள் பல்லக்கிலேயே போக்குவரத்துச் செய்தனர்.

இலங்கைக்கு 1883 லேயே றிக்சோ அறிமுகமானது. 19ந் நூற்றாண்டின் பிற்பகுதியில் மிஷனரிமார் யாழ்ப்பாணம் வந்த போது சயிக்கிள் உபயோகிக்கப்பட்டது. அக்காலத்தில் போக்குவரத்திற்குக் குதிரைகளும் பாவிக்கப்பட்டன. யாழ்ப்பாணத்திற்குப் புகையிரதம் வரவேண்டுமென்று பல துறைப் பெரியார்கள் முயற்சித்தார்கள். சட்டநிரூபணசபையில் சேர் பொன் இராமநாதன் இதற்கான தீர்மானத்தைக் கொண்டு வந்தார். இதன் பயனாக 1906 ல் புகையிரதம் யாழ்ப்பாணம் வந்தது. ஊர்காவற்றுறை, காங்கேசன்துறை, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, என்பன முக்கிய துறைமுகங்களாக இருந்தன. காங்கேசன்துறை துறைமுகம் 1851ல் திறக்கப்பட்டது. அப்போது யாழ்ப்பாண அரச அதிபராயிருந்த டைக் என்பவர் இதற்கு முன்னின்றுழைத்தார்.

லேடி விறவலொக், டேடிவி ஹோடன், அத்தாசியா என்ற நீராவிக் கப்பல்கள் சேவையிலிருந்தன. யாழ்ப்பாணத்திலிருந்து நாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டினம் நீராவிக்கப்பல் பயணம் செய்யப்பட்டது, யாழ்ப்பாணத்திலிருந்து இலங்கையில் வேறு பட்டினங்களுக்கு முத்திரை ஒட்டப்பட்டதபால் போக்கு வரத்து 1855ஆடி மாதம் ஏற்பட்டது. டெலிபோன் வசதி 1867ல் ஏற்பட்ட சில வருடங்களில் யாழ்ப்பாணத்திற்கு டெலிபோன் வசதி கிடைத்தது. முதன் முதல் யாழ்ப்பாணத்தில் வெளிவந்த புதினப் பத்திரிகை மோணிங்ஸ்ரார் என்ற ஆங்கிலப் பத்திரிகையாகும். இது 1841 ல் வெளி வந்தது. இதன் தமிழாக்கம் உதய தாரகை என்ற பெயரில் வெளிவந்தது. அப்புக்காத்து கூல் என்பவர் யவ்னா பிறீமான் என்ற இலக்கிய பத்திரிகையை ஆங்கிலத்தில் 1862 செப்டெம்பர் 8ந் திகதி வெளியிட்டார். சி. டபிள்யூ கதிரவேற்பிள்ளை 1863 ல் சிலோன் பேற்றிபற் என்ற பத்திரிகையை வெளியிட்டார். யாழ் கத்தோலிக்க மிஷனரிமார் கத்தோலிக்க காடியனை 1875ல் அறிமுகப்படுத்தினார். சத்திய வேத பாதுகாவலன் என்று தமிழிலும் இதனைப் பிரசுரித்தனர்.

இப்பத்திரிகைகள் யாழ்ப்பாணத்திலிருந்து மலேசியா வரை அனுப்பப்பட்டன. இவற்றுடன் 1880 ல் உதயபானுவும், இலங்கா நேசனும் பிரபலமான இதழ்களாக இருந்தன. அ. முத்துத்தம்பிப் பிள்ளை என்பவர் தமிழில் வைத்திய புதினங்களை 1898ல் பிரசுரித்தார். ஆங்கில மருந்துவக் குறிப்புகள் தமிழில் மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டன. சபாரத்தின முதலியார் என்பவர் 1812ல் புதினலங்காரியை வெளியிட்டார். சைவாபிமானி, ஞானப்பிரகாசம் என்பன 19ம் நூற்றாண்டின் பின் பகுதியில் பிரசுரமாயின. அச்சுவேலி எஸ். தம்பிமுத்து என்பவர் சன்மார்க்க போதினியை 1884 லிலும், புலோலி குமாரசுவாமிப் புலவர் 1900 அளவில் திராவிட கோகிலத்தையும் வெளியிட்டனர்.

யாழ்ப்பாணக் கச்சேரி 1815ல் கட்டப்பட்டது. சட்ட நூலகம் 1845 லும், விக்டோரியா நூதன சாலை 1895லும் நிறுவப்பட்டன. வெஸ்லியன் மிஷனரிமார் 1817ல் யாழ். மத்திய கல்லூரியையும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரியை 1872 லும், உடுவில் பெண்கள் பாடசாலையை 1824ல் அமெரிக்கன் மிஷனரிமாரும், யாழ்ப்பாண கொன்வென்ரை ஐரோப்பிய றோமன் கத்தோலிக்க சபையும் (1963ல் அங்கு ஒரு பெண்கள் விடுதியையும்) முதலாவது யாழ்ப்பாண பிஷப் சென் பற்றிக்ஸ் கல்லூரியை 1850 லும், வேம்படி மகளிர் கல்லூரியை வெஸ்லியன் மிஷனரிமார் 1877 லும், சென்யோன்ஸ் கல்லூரியை 1891 லும் ஏற்படுத்தி ஆங்கிலக் கல்வி வளர்ந்தோங்க உதவினர்.


ஆறுமுகநாவலர் அவர்கள் வண்ணார்பண்ணைச் சைவப் பிரகாச வித்தியாசாலையை 1848ல் நிறுவி மாணவருக்கு இலவசக் கல்வியை அளித்தார். தமிழ் சமஸ்கிருதம் இங்கு கற்பிக்கப்பட்டன. சைவபரிபாலன சபையினர் 1890ல் யாழ் இந்துக்கல்லூரியை நிறுவினர். இங்கு தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் என்பன பாட மொழிகளாக இருந்தன. O



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானில் உலா வரும் செய்ம்மதிகள்

~~~~ சர்வ சித்தன் ~~~~



விஞ்ஞான நாவலாசிரியரான ஆர்தர் சி. கிளார்க் 1945 இல் பிரித்தானிய அறிவியற் சஞ்சிகை ஒன்றில் 'Wireless World' என்றொரு கட்டுரை எழுதினார். அதில் புவியின் ஓரிடத்திலிருந்து விண்ணிலுள்ள செய்ம்மதி ஒன்றிற்கு அனுப்புகின்ற செய்தியை ஆயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள புவியின் இன்னொரிடத்தில் மீளத்தகவலாகப் பெறமுடியும் என விபரித்தார். அவருடைய கருத்து பன்னிரு ஆண்டுகளின் பின்னர் நிருபணமாயிற்று.

1957, அக்டோபர் 4 ஆம் திகதி ருசியா முதலாவது செயற்கைச் செய்ம்மதியை வானில் பறக்க விட்டது. ஸ்பூட்னிக் - 1 என்று அழைக்கப்பட்ட இச் செய்ம்மதி 58 செ. மீ விட்டத்தையும் 83. 6 கி.கி எடையையும் கொண்டிருந்தது. அது பூமியை 227 தொட்டு 947 கி.மீ. வரையிலான உயர ஒழுக்கில் சுற்றி வந்தது. புவியை வலம் வர 96 நிமிடங்கள் ஒரு தடவைக்கு எடுத்தது. 1400 தடவைகள் புவியைச் சுற்றிய பின்னர் 1958 யனவரி 4 ஆம் நாள் அது வளிமண்டல உராய்வினால் எரிந்து போனது. ஸ்பூட்னிக் - 1 உண்மையில் செய்தி பரிமாறும் செய்ம்மதியன்று. ஆனால், ஆர்தர் சி. கிளார்க்கின் எதிர்கூறலை நிருபணமாக்கிய செய்ம்மதியாகும்.

இச் செய்ம்மதியின் அழிவுடன், அடுத்த மாதமே ஸ்பூட்னிக் – 2 என்ற பெரியதொரு செய்ம்மதியை லைகா என்றொரு நாயைப் பயணியாக அதனுள் வைத்து ருசியா விண்ணில் விட்டது. புவியை வலம் வந்த இந்த ஸ்பூட்னிக் - 2, லைகா நாயுடன் வெற்றிகரமாக பூமிக்கு மீண்டு வந்தது. மேல் வளி மண்டலம் பற்றியும், கதிர்வீச்சுக்கள் பற்றியும் புதிய தகவல்களை ஸ்பூட்னிக் - 2 தந்தது. 1958, மே மாதம் ஸ்பூட்னிக் - 3 விண்ணிற்கு அனுப்பப்பட்டது. இது 2 தொன்கள் நிறையுடையதாகவும், ஒரு விஞ்ஞான ஆய்வு கூடத்திற்குரிய கருவிகள் பொருத்தியதாகவும் புவியை வலம் வந்தது. இதனைத் தொடர்ந்து இன்னும் 7 ஸ்பூட்னிக் செய்ம்மதிகள் ருசியாவால் அனுப்பப்பட்டன. 1961 ஏப்ரல் மாதம் யூரிக்காரின் என்ற முதலாவது விண்வெளி வீரனைச் சுமந்து கொண்டு விண்ணில் வலம் வந்தது. செய்ம்மதி, விண்வெளிப் பயணத்தில் புதியதொரு சகாப்தத்தைத் தொடக்கி வைத்தது.

அமெரிக்காவின் முதலாவது செய்ம்மதி 1958, ஜனவரி 31 ஆம் திகதி விண்ணில் ஏவப்பட்டது. இதற்கு எக்ஸ்புளோரர் - 1 என்று பெயர். 14 கிலோ கிறாம் நிறை கொண்ட இந்தச் செய்ம்மதி மூலம் புவியைச் சுற்றி (Van Allen) வன் அலென் வலயம் எனப்படும் வெடிக்கும் துகள்களைக் கொண்டதொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
~~~~

வலயம் அமைந்திருப்பதை அறிய முடிந்தது. எக்ஸ்புளோர் - 1 இன் பின் வன்கார்ட் - 1 என்ற செய்ம்பதிய அமெரிக்கா விண்ணில் வலம் வர விட்டது. ஸ்பூட்னிக் 1 - இன் பின்னர் வானில் ஏறத்தாழ 2000 செய்ம்மதிகள் வரை வலம் வரவிடப்பட்டன. இவற்றில் பல இன்று விண்ணிலில்லை. ஏனையவை பூமிக்கு விண்வெளி பற்றிய புதிய தகவல்களைத் தந்துள்ளன. அமெரிக்கா ரூசியா ஆகிய நாடுகளைவிட அவுஸ்திரலியா, கனடா, சீனா, பிரான்ஸ், ஜேர்மனி, பிரித்தானியா, இத்தாலி, யப்பான், இந்தியா ஆகிய நாடுகளும் செய்ம்மதிகளை விண்ணில் ஏவியுள்ளன.

இன்று பல்வேறு தேவைகளுக்கான செய்ம்மதிகள் வானில் பவனி வருகின்றன. அவை :

1. தொடர்பாடல் செய்ம்மதி -

தொடர்பாடல் செய்ம்மதிகளை கொம்சாற் (Comsat) என்பர். றொக்கட் ஒன்றின் உதவியுடன் இவை விண்ணிற்கு ஏவப்படுகின்றன. குறித்த உயரத்தில் இவை புவியை வலம் வர விடப்படுகின்றன. 1958, டிசம்பர், 18 ஆம் திகதி முதலாவது கொம்சாற் செய்ம்மதியை அமெரிக்கா வானில் வலம் வர விட்டது. அது Score என அழைக்கப்பட்டது. (S = signal/ C = Communication/ O - orbiting/R = Relay/ E = Equipment) இதன் மூலம் அமெரிக்க ஜனாதிபதி ஐசன்ஹோவர் அமெரிக்க மக்களுக்கு கிறிஸ்மஸ் வாழ்த்துக்களை தெரிவித்தார். புவியிலிருந்து அனுப்பும் தகவலை பூமி எங்கும் ஒலிபரப்பும் சக்தி வாய்ந்ததாக இந்தச் செய்திச் செய்ம்மதி விளங்கியது. இந்த Score - செய்ம்மதி பதின் மூன்று நாட்களின் பின் பூமியை நோக்கித் திரும்பிய போது, வளிமண்டல உராய்வினால் எரிந்து அழிந்து போனது.

1960 ஆம் ஆண்டு அமெரிக்கா எக்கோ 1,2 ஆகிய செய்திச் செய்ம்மதிகளை அனுப்பியது இவை பூமிக்கு அனுப்பிய வானொலிச் சமிக்கைகள் தெளிவற்றிருந்தன. 1962 இல் ரெலிஸ்ரார் என்றொரு தொலைக் காட்சிகளை ஒளிபரப்பும் செய்ம்மதி அனுப்பப்பட்டது. இது சர்வதேசத் தொலைச் செய்திப் போக்குவரத்தில் புதிய அத்தியாயமாகும். இதன் பின்னர் ஏர்லிபேர்ட் என்ற பெயர் கொண்ட தொலைச் செய்திச் செய்ம்மதி தொலைக் காட்சிப் படங்களையும், வான் புகைப்படங்களையும் புவிக்கு அனுப்பியுதவுகிறது. பொதுவாக செய்திச் செய்ம்மதிகள் சிறிய தொரு வானொலி பரப்பு நிலையம் போலச் செயற்படுகின்றன.

2. வானிலைச் செய்ம்மதி -

வானிலைத் தகவல்களைத் தர உதவும் செய்ம்மதிகளை 'Metsats' என்பர். (Meteorological Satellites முதலாவது வானிலைச் செய்ம்மதி ரைரோஸ் (Tiros) ஆகும். இது 1960, ஏப்பிரல் 1 ஆம் திகதி விண்ணில் ஏவப்பட்டது. இச் செய்ம்மதி 1960 இலிருந்து 1967 வரை வானிலைத் தகவல்களைப் பூமிக்கு வழங்கியது.

இன்று நிம்பஸ் (Nimbus) செய்ம்மதிகள் இச் செயலைச் செய்கின்றன. இவை புவியின் வளிமண்டலத்தை இரவு - பகலாகப் புகைப்படமெடுத்து வானிலை ஆராய்ச்சி நிலையங்களுக்கு அனுப்பும் திறன் வாய்ந்தன. சூறாவளிகளின் உருவாக்கத்தை முன் கூட்டியே அறியத்

(மறுபக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புப் பொது அறிவுப் போட்டி (அ. க. - 13)

## வினாக்களுக்கான சரியான விடைகள்

1) தொலமி / நிக்கலஸ் கொப்பநிகஸ் 2) மரணப்பள்ளத்தாக்கு 3) சன்னறுவா 4) CFC - குளோபுளோரோ காபன் 5) அபினி 6) கண்டல் (True Mangrove) 7) நீலத்திமிங்கிலம் 8) ஆர்க்கியோப்ரெகிஸ் 9) லியனார்டோ டாவின்சி. 10) ஒடிசி, இலியட் 11) சேர் டொரைல்ட் ஜோர்ஜ் பிரெட்மன் 12) C-Chariot (தேர்), H-Horse (குதிரை), E-Elephant (யானை), SS-Soldiers (படைவீரர்) 13) ஆப்பிரகாம் லிங்கன் 14) கிங்ஸ்பரி 15) சுவாமி விபுலானந்தர் 16) தமிழ் நாவலின் தந்தை-பிரதாப முதலியார் சரித்திரம் 17) மேக்காற்றர் 18) எட்வேர்ட் ஸ்ரேற் / ஜெமினி - 4 19) நாய் / லைகா 20) புதன், வெள்ளி / சனியின் சந்திரன் ரிட்டன் 21) நீல் ஆம்ஸ்ரோங் 22) லெப் சங்கர் சுரேஸ், கம்பர்மலை 23) புஸ்காஷி 24) பென்சாயில் குளோரைட் 25) வேலணைப் பண்டிதர் ஜெகநாதன்.

O சிறப்புப் பொது அறிவுப் போட்டி நம்ப முடியாத ஒரு புதிய அனுபவத்தை எமக்குத் தந்திருக்கிறது. அறிவுக்களஞ்சியத்தில் வரும் சாதாரண போட்டிகளுக்கே பல நூற்றுக் கணக்கானவர்கள் பங்கு கொள்வது வழக்கம். ஆனால் ரூ 3000/- பரிசு அறிவிக்கப்பட்ட இந்த சிறப்புப் பொது அறிவுப் போட்டியில் நூறுபேர் கூட பங்கு கொள்ளாதது நம்ப முடியாத ஒரு ஆச்சரியம்! இதன் காரணத்தை அறிய ஆராய்ந்தோம்; சரியான காரணம் தெரிய வில்லை. வினாக்கள் அதிகமாகவும் கடுமையானதாகவும் இருந்தன என்பது சிலருடைய கருத்து; போட்டி வெளி வந்த நேரம் உயர் வகுப்புப் பரீட்சை நடந்ததால் மாணவர்கள் இதில் கவனம் செலுத்த வில்லை என்பது இன்னொரு கருத்து. எப்படியிருந்த போதிலும் வந்த விடைகளைச் சரி பார்த்து இருவரைப் பரிசுக்குரியவர்களாகத் தெரிவு செய்துள்ளோம்.

இவர்கள் இருவரும் தனித்தனி ரூ 100/- பரிசு பெறுகிறார்கள்.

---

(முற்பக்கத் தொடர்ச்சி)

தரும் திறன் வாய்ந்தன. இன்று அமெரிக்கா, ருஷியா, ஐக்கிய இராச்சியம், யப்பான், பிரான்ஸ், சீனா ஆகிய நாடுகள் தமக்கென வானிலைச் செய்ம்மதிகளைக் கொண்டுள்ளன.

**3. ஏனைய செய்ம்மதிகள் —**

நவ்சாற் (Navsats) என அழைக்கப்படும் கப்பற் பயணங்களுக்கு உதவும் செய்ம்மதிகளும் புவியை வலம் வருகின்றன. இவை சமுத்திரங்களில் தடுமாறும் கப்பல்களுக்கு வழி காட்டித் தகவல்களைத் தருகின்றன. றான்ஸிற் - IB (அமெரிக்கா), கொஸ்பால் (ருசியா) ஆகிய செய்ம்மதிகள் இவ்வகையின; இராணுவ வேவு பார்க்கும் செய்ம்மதிகள், அறிவியலாய்வுகள் செய்யும் செய்ம்மதிகள் என்பனவுமுள்ளன. பூமியின் வளங்களை அறிவியலாய்வுகள் செய்யும் செய்ம்மதிகள் அடையாளம் காட்டுகின்றன. O



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) இ. இளங்குமரன், யாழ் இந்துக் கல்லூரி.
2) இ. பிரஷாந்தன், யாழ் இந்துக் கல்லூரி.

18 விடைகளுக்கு மேல் சரியாக எழுதிய பின்வருவோரும், இறுதியில் நடக்கும் வினாடி வினாப் போட்டியில் பங்கு கொள்ளத் தெரிவாயுள்ளனர்.

1) ச. பிரசன்னா, 610, காங்கேசன் வீதி, யாழ்ப்பாணம். 2) கே. இராஜகோபால், 'பொன்மனை' தொல்புரம், சுழிபுரம். 3) சோ. செந்தூரன் இல 12, ஐயனார் கோவில் வீதி, வண்ணார் பண்ணை. 4) வி. கோகுலன், தபால்க வீதி, சாவகச்சேரி. 5) சோமஸ்கந்தன் ரஜேஷ், சுன்னாகம் மேற்கு 6) சச்சிதானந்தசிவம் சயந்தன், பொன்னகம், K.K.S வீதி, மல்லாகம். 7) சி. சிவசொரூபி, 158 பொற்பதி வீதி, கோண்டாவில் கிழக்கு. 8) சோமசுந்தரம் கமலச்சந்திரன், 40 பிறவுன் வீதி, யாழ்ப்பாணம். 9) யோகநாதன் சிவராம் ''மாரித்தோட்டம்'' தாவடி வடக்கு கொக்குவில்.

சிறப்புப் பொது அறிவுப் போட்டியை இவ்வளவில் நிறுத்தி விடாமல், புதிதாகப் 12 வினாக்களை இந்த இதழில் தருகிறோம். இந்த 12 வினாக்களுக்கும் விடைகளை எழுதிப் பரிசில்களைப் பெறுங்கள். முன்பு அறிவித்த படி முதற் பரிசு ரூ 1000/-; இரண்டாம் பரிசு ரூ 500/-; மூன்றாம் பரிசு ரூ 300/-; ஆறுதல் பரிசு (5 பேருக்கு ரூ 100/- வீதம்) ரூபா 500/- வழங்கப்படும். சரியான விடை எழுதியவர்களில் (இந்த இதழில் அறிவிக்கப்பட்ட இருவர் போக மீதி) 5பேருக்கு ரூபா 100/- வீதம் ரூ 500/- வழங்கப்படும்.

மற்ற நிபந்தனைகள் யாவும் அ. க. 13 ஆம் 14 ஆம் இதழ்களில் அறிவித்தபடியே.

முடிவு திகதி 18 - 9 - 93. அடுத்த இதழில் போட்டி முடிவுகள் வரும்.

## புதிய வினாக்கள்

1. நைலின் கொடை என்பது எதனை?
2. ரொறென்ரோ நகர் எந்த ஏரிக்கரையிலுள்ளது?
3. ஒக்டோபர் 24 உலகின் எந்த விசேட தினம்?
4. இலங்கையின் மிக உயரமான நீர் வீழ்ச்சி யாது?
5. பொக்கனை நீர் ஊற்று யாழ்ப்பாணக் குடா நாட்டில் எக்கிராமத்திலுள்ளது?
6. 93' யூலாயில் மண்கிண்டி மலைத் தகர்ப்பின் போது மரணித்த ஸ்ரீலங்காப் படையினர் எத்தனைபேர்?
7. பால் வழியில் நன்கு அறியப்பட்ட வெள்ளுடுத் தொகுதி யாது?
8. மிக்கிமவுஸ் என்ற கார்டூனை உருவாக்கிய கார்டூனிஸ்ட் யார்?
9. பேராசிரியர் வேலுப்பிள்ளை, எல்லாளனின் உண்மைப் பெயர் எது வென ஆராய்ந்து கூறியுள்ளார்?
10. லிறா என்பது எந்த நாட்டு நாணயம்?
11. FAO- என்றால் என்ன?
12. போலோ விளையாட்டிற்குப் புகழ் பெற்ற இடம் யாது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோம்பியிருத்தல்

ஓய்வு எல்லோருக்கும் தேவையானதே. நாள் முழுவதும் வியர்வை சிந்த உழைக்கும் தொழிலாளிக்கும், மூளையை உபயோகித்துச் செயல்படும் புத்திஜீவிகளுக்கும், வீட்டு வேலை செய்யும் பெண்களுக்கும், சகல தொழிலாளர்களுக்கும் ஓய்வு தேவையானதே.

ஓய்வுக்கும் வேலை ஒன்றும் செய்யாது சோம்பி இருப்பதற்கும் அனேகம் வேறுபாடுகளுண்டு.

இந்த உலகில் நேரமானது ஒரு விலை மதிப்பற்ற பொருளாகும். ஒரு நிமிடந்தானும் வீணாகி விடக் கூடாது. ஒன்றும் செய்யாதிருத்தல், சோம்பியிருத்தல் என்ற இரண்டிற்குமுள்ள முரண்பாடுகளை நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும்

கூடுதலான ஓய்வென்பதை அனேகமாக வேலை மாற்றங்களினால் அடையக் கூடுமேயன்றி ஒரு வேலையும் செய்யாமல் சும்மா இருப்பதனாலன்று. சோம்பியிருப்பதென்பது ஓய்வாயிருப்பதற்குச் சொல்லப்படும் சமாதானமாகாது.

சிலபேர் உட்கார்ந்து சிந்திப்பார்கள், வேறு சிலர் சிந்தனை இன்றிச் சும்மா உட்கார்ந்திருப்பார்கள்.

சிவனே என்று சும்மா உட்கார்ந்திருப்பவர்கள்தான் இந்த உலகிலே வறுமையால் வாடுபவர்கள்; கையாலாகாதவர்கள்.

தினந்தோறும் மனித இயந்திரம் ஆக்கபூர்வமான சக்தியை உண்டு பண்ணிக் கொண்டேயிருக்கும். இந்த சக்தியை உபயோகப்படுத்தாவிடில் துன்பங்கள் வந்தடையும்.

உடல் உழைப்பாளிக்குத் தகுந்த ஓய்வு மூளைக்கு வேலை கொடுப்பதாகும். உதாரணமாகப் பத்திரிகைகளைப் படிக்கலாம். நூல்களை வாசிக்கலாம். தினசரி மூளையைப் பிரயோகித்து வேலை செய்பவருக்கு உண்மையான ஓய்வு தோட்டவேலை, தச்சுவேலை முதலான வேலைகளைச் செய்வதனால் கிடைத்து விடுகிறது.

எல்லோருமே தகுந்த சமயங்களில், சுமார் அரை மணி நேரம் இளைப்பாறி ஓய்வெடுப்பது நல்லது. ஆனால் அப்படி எடுக்கும் ஓய்வுக்கு நாளடைவில் அடிமையாகி விடக்கூடாது. உடல் தளர்ச்சிக்கு ஓய்வு தேவை என்பது கட்டுப்பாட்டிற்குள் இருக்க வேண்டும்.

உங்களுக்கு கிடைக்கும் ஓய்வு நேரங்களைப் புத்திசாலித் தனமாகப் பயன்படுத்த வேண்டும். மகிழ்ச்சியோடு இருப்பவர்கள் தங்களுக்குள்ளேயிருந்து வெளிப்படும் நரம்பு சக்தியை நல்ல வழியில் பிரயோசனப்படத்தக்க முறையில் பயன் படுத்த வேண்டும்.

முற்றாக சோம்பியிருப்பதை மருந்துக்கு ஒப்பிடலாம். நல்ல ஆரோக்கியமான திடகாத்திரமான மக்களுக்கு அந்த மருந்து தேவைப்படாது.

ஈ. ஆர். தொம்சன், தமிழில்: கே. சி. இராமநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதிப்பறவை:

# ஆகேயொப் டெரிக்ஸ்

அடையற் பாறைகளிடையே புதையுண்டு சுவடாக அகப்பட்ட ஆதிப் பறவைகளின் வடிவம், விலங்கிய லாளர்களுக்கு வியப்பைத் தந்தது. அலகுகளில் விலங்குகளுக்கு இருப்பன போன்ற பற்களை இவை கொண்டிருந்தன. உண்மையில் இவை 'பறக்கும் ஊர்வன வாகவே விளங்கியுள்ளன. அவற்றில் ஒன்று தான் 'ஆகேயொப்டெரிக்ஸ் Archaeopteryx) என்ற ஆதிப்பறவை.

மெசோசோயிக் யுகத்தில் புவியின் தரையிலும் நீரிலும் 'டைனோசொர்' எனப்படும் இராச்சத விலங்குகள் (ஊர்வன) ஆதிக்கம் செலுத்தின. அவற்றுள் சிறியன சில பகைவர்களிடமிருந்து தப்பிப் பதற்காகப் புதிய முறையொன்றினைப் பின்பற்றின. ஆகாயத்தில் இருப்பதே அம்முறையாகும். இவை பறக்கும் ஊர்வனவாக விருந்த போதிலும், உண்மையான பறவைகள் அல்ல. உயரமான இடத்திற்கு ஊர்ந்து சென்ற பின், மீண்டும் நிலத்தை நோக்கிப் பறந்திருந்தாலும், நிலத்திலிருந்து உயரமான இடத்திற்குப் பறந்து செல்லும் ஆற்றலை இவை பெற்றிருந்தனவா என்பது சந்தேகத்திற்கிடமானதாகும். எனினும் மெசோசோயிக்யுகம் முடிவடையுமுன் இக்குறைபாடும் நீங்கியது. இவையே ஆதிப்பறவைகளாக விளங்கின.

ஆகேயொப்டெரிக்ஸ் விலங்கிற்கும் பறவைக்கும் இடைப்பட்ட உயிரினமாகும். இப்பறவையை விட ப்ரேநோடன் (Pterandon), றாம்ஹோறின்சஸ் (Rhan phorhynchus) என்ற ஆதிப்பறவைகளும் இருந்துள்ளன. இவற்றுக்கும் அலகுகளிற் பற்கள் இருந்தன. ஆனால் இவ்விரண்டிற்கும் ஆகேயொப்டெரிக்சுக்கும் இடையில் ஒரு பிரதான வேறுபாடிருந்தது. ஆகேயொப்டெரிக்ஸ் பறவைக்கு இறகுகளில் சிறகுகள் இருந்துள்ளன. மற்றைய இரண்டிற்கும் வெளவால் போன்று தோல் சிறகுகள் இருந்துள்ளன. உண்மையில் இவை பறக்கும் ஊர்வனவாகவே விளங்கியுள்ளன.

— 'சுடர்'.

---

## எண்கோலம்

12345679 × 9 = 111111111

12345679 × 18 = 222222222

12345679 × 27 = 333333333

12345679 × 36 = 444444444

12345679 × 45 = 555555555

12345679 × 54 = 666666666

12345679 × 63 = 777777777

12345679 × 72 = 888888888

12345679 × 81 = 999999999

— த. ஜெயவிஜயா, மாதகல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்புப் பொது அறிவுப் போட்டி

## பரிசில்கள் வழங்குவோர்:

O முதலாம்: பரிசு ரூபா 1000/-

அன்பளிப்புச் செய்பவர்: திரு 'புத்தொளி'

''செல்வ அகம்'' ஆனைக்கோட்டை.

லெப்டினன்ட் காந்தன் (சுப்பிரமணியம் சிவகணேசன்) நினைவாக

O இரண்டாம் பரிசு ரூபா 500/-

அன்பளிப்புச் செய்பவர்: திரு அநு. வை. நாகராஜன்

தமது பெற்றோர்

திரு, திருமதி நாகமுத்து வைரமுத்து நினைவாக

O மூன்றாம் பரிசு ரூபா 300/-

அன்பளிப்புச் செய்பவர்: திரு. ச. பாலசுந்தரம் பி. ஏ. (சிறப்பு)

தமது தந்தையார், வேலணை பிரபல வர்த்தகர்

அமரர் கதிரேசு சண்முகம்பிள்ளை நினைவாக

O ஏனைய பரிசில்கள் ரூபா 1200/-

அன்பளிப்புச் செய்பவர்: 'அறிவுக் களஞ்சியம்'

---

## வணக்கம்

ஒரு பெரிய நோக்கத்துக்காக எங்களுடைய எத்தனையோ சுகங்களைத் துறந்து விட்டு வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

ஆனால்—

எதைத் துறந்தாலும் எமது அறிவுச் செல்வம் குறைந்து விடாமல் நாங்கள் பார்த்துக் கொள்ள வேண்டும்: முக்கியமாக இளைஞர்களின் அறிவு வளர்ச்சி.

இன்றைய சூழ்நிலையில் செய்ய இயலாது என்று முதலில் நினைத்த செயலை, என்னுடைய பெரிய ஆர்வத்தின் காரணமாகச் செய்யத்துணிந்தேன்.

அந்தச் செயலின் உருவந்தான் ''அறிவுக் களஞ்சியம்''

நான் எதிர் பார்த்ததற்கு மேலாகவே வாசகர்கள் ஆதரவு தந்தார்கள் - தந்து கொண்டிருக்கிறார்கள். இன்றைய முக்கியமான தேவைகளில் 'அறிவுக் களஞ்சிய'மும் ஒன்றாக விளங்குகிறது.

இது அறிவுக் களஞ்சியத்தின் 15 ஆவது இதழ். பாலகாண்டத்தை வெற்றிகரமாகத் தாண்டி வந்து விட்டோம். இனிப்பயமில்லை!

— வரதர்

---

அறிவுக் களஞ்சியம் - 15, யாழ்ப்பாணம், காங்கேசன்துறைச் சாலை 226 ஆம் இலக்கத்திலுள்ள ஆனந்தா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிட்டவர்: தி. ச. வரதராசன் ... 93.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதினம்

* ஆடிவேல் விழாவன்று கொழும்பு பம்பலப் பிட்டியில் குண்டு வெடிப்பு 6 தமிழர்கள் பலி, 3 பேருக்கு காயம்.

* அமெரிக்க மாசசூசட்ஸ் மாநிலத்தில் மே 22 ம் திகதி தமிழீழப்பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

* கிளாலியில் ஆகஸ்ட் 10 ம் திகதி இடம் பெற்ற படகு விபத்தில் 19 பேர் பலியாகினர்.

* ஐ. நா. மந்திப்ஸ்தத்தின் கீழ் சமாதானத் தீர்வுத் திட்டத்தை நான்கு நோபல் பரிசு பெற்றவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது. இலங்கை அரசாங்கம் நிராகரிப்பு.

* விடுதலைப் புலிகளின் காவலில் இருந்த மாத்தளையைச் சேர்ந்த டி. எஸ். சீ. பெரேரா இவரது மனைவி தாய்மை அடைந்திருப்பதால், மனிதாபிமான முறையில் தலைவர் பிரபாகரன் அவர்களால் ஆகஸ்ட் 16 ம் திகதி விடுதலை செய்யப்பட்டார்.

* தமிழீழ மாவட்ட நீதி மன்றம் சுன்னாகத்தில் ஆகஸ்ட் 25 ம் திகதி திறந்து வைக்கப்பட்டது

மண்கிண்டி மலை இராணுவ முகாம் தகர்ப்பின் போது $4\frac{1}{2}$ கோடி ரூபா பெறுமதியான ஆயுதம் அரசாங்கத்தால் இழப்பு என்று "சண்டே ரைம்ஸ்" பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

* 2001 ம் ஆண்டளவில் இலங்கையின் சனத்தொகை 1 கோடி 96 லட்சம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

* உலகில் உள்ள இலக்கிய நாவல்கள் தமிழில் மொழி பெயர்ப்பதற்கு இலங்கையில் திட்டமொன்று ஆரம்பிக்கப்படும் என்று கொழும்பு சாகித்திய விழாவில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

* எதிர்பாராத விதமாக பூமி அசுத்தமடைந்து, மனிதன் பூமியில் வாழ முடியாது போனால் எதிர்காலத்தில் மனித சமுதாயம் விண்வெளியை வாழ்வதற்கேற்ற இடமாகக் கொள்ளலாம் என்று விண்வெளி ஆராய்ச்சியாளர் ஆர்தர் சி. கிளார்க் தெரிவித்துள்ளார்.

* இறைச்சிக்காக பசு மாடுகள் வெட்டப்படுவதை தடை செய்ய வேண்டும் என்று யாழ் மிருக வைத்திய அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.

* 12 லட்சத்து 50 ஆயிரம் வைப்பில் இட்ட பின்பு தான் வெளிநாட்டவர்கள் இலங்கையரை திருமணம் செய்யலாம் என்று புதிய தடைமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரதர் கதை மலர் - 2

# இராமன் கதை

## (இராமாயணம்)

சிறுவர்கள் வாசிப்பதற்காக இனிய, எளிய தமிழ் நடையில்,

ஈழத்தின் மூத்த எழுத்தாளர்
"சம்பந்தன்"

எழுதியது.

விலை ரூபா 12/-

10. 9. 93 ல் வெளிவருகிறது!

வரதர் கதைமலர் - 1

# அவன் பெரியவன்

அநு வை. நாகராஜன்

எழுதியது

சிறுவர்கள் ஆவலோடு படிக்கிறார்கள்!
படித்துப் பாராட்டுகிறார்கள்!

விலை ரூபா 12/-

இப்பொழுது விற்பனையாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org